பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 12 வெள்ளிக்கிழமை (26.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 212

# யுத்த பீதியை தக்க வைத்து தமிழரை ஒடுக்க அரசு முயற்சி

## தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்க்க முடியாது என்று சம்பந்தன் காட்டம்



கொழும்பு, ஜூன் 26

யுத்தம் முடிவடைந்துவிட்ட போதிலும் நாட்டில் தொடர்ந்தும் யுத்தப் பீதியைத் தக்கவைத்து தமிழர்களை ஒடுக்க அரசு முற்படுகிறது. புலிகள் இல்லாத இச்சந்தர்ப்பத்தில் தமிழர்களின் பிரச்சினைகளை இராணுவ ரீதியில் தீர்க்க அரசு முற்படக்கூடாது. நீண்ட காலமாகவுள்ள இப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான நடைமுறைகள் மூலமே தீர்வு காணப்படவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் காட்டமாகத் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டின் மூன்று நாளேடுகளும் யாழ். நகரில் நேற்று தீ வைத்து எரிப்பு

## இனந்தெரியாத ஆயுதக்கும்பல் கைவரிசை



யாழ்ப்பாணம். ஜூன். 26

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் உதயன், தினக்குரல், வலம்புரி நாளேடுகளின் பிரதிகள் முகமூடி அணிந்த இனந் தெரியாத ஆயுததாரிகளால் நேற்று அதிகாலை 4.55 மணியளவில் வீதியில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டன.

வழமைபோன்று நேற்றுக் காலை, பத்திரிகை நிறுவனங்களின் விநியோகப் பணியாளர்கள் தமது வாகனங்களில் பத்திரிகைகளை விநியோகிப்பதற்காக எடுத்துச் சென்றார்கள்.

யாழ். நகருக்கு சமீபமாக நாவலர் வீதியில், ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் உதயன் பிரதிகளை எடுத்துச்சென்ற விநியோகப் பணியாளர் மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகளால் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சனி, திங்கள் கப்பல் சேவை இடம் பெறா; மீண்டும் செவ்வாய்

யாழ்ப்பாணம், ஜூன் 26

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் இடம்பெறும் பயணிகள் கப்பல் சேவை திருத்த வேலைகள் காரணமாக, நாளையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் கிருஷ்ணி கடத்தப்பட்டு விடுதலை

கொழும்பு, ஜூன் 26

சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்பு பிரிவில் பணியாற்றும் ஊடகவியலாளரான கிருஷ்ணி கந்தசாமி இஃபாம் நேற்று முன்தினம் வேலைக்குச் சென்ற சமயத்தில் கடத்தப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் எனக்கூறி வாகனத்தில் வந்த மூவர் தம்மை கடத்திச் சென்று நீண்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 17 தமிழர் கைது!

கொழும்பு, ஜூன் 26

வெள்ளவத்தைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 17 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கள (16 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

தரம் 4 மாணவர்களுக்கான வினாத்தாள்

## கூட்டுப்படைகளின் அதிகாரி பதவியை சட்டபூர்வமாக்கியது நாடாளுமன்றம்

### அதற்குக் கூடுதல் பொறுப்புகள் வழங்க சபை இணக்கம்

கொழும்பு, ஜூன் 26

இதுவரை காலமும் சம்பிரதாயபூர்வ பதவியாக இருந்து வரும் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவியை சட்டரீதியிலான பதவியாக மாற்றி, அப்பதவிக்குப் பொறுப்புகளை வழங்கும் சட்டமூலம் நேற்று அரசால் நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டு அது சட்டமாக்கப்பட்டது.

காலை 10.30 மணியளவில் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம் மீதான விவாதம் பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெற்றது.

இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க, (16 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாநகர சபைத்தேர்தலில் 4 கட்சிகளும் 2 சுயேட்சைகளும் களத்தில்

## முஸ்லிம் காங்கிரஸின் மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். மாநகரசபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இத் தேர்தலில் போட்டியிட 5 அரசியல் கட்சிகளும் 3 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுத்தாக்கல் செய்திருந்தன. இவற்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஆறுமுகம் செல்லத்துரை தலைமையிலான சுயேட்சைக்குழு ஆகியவற்றின் வேட்பு மனுக்களுக்கு போதிய ஆவணங்கள் இல்லாமையால் நிராகரிக்கப்பட்டன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய நான்கு அரசியல் கட்சிகளினதும், அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி தலைமையிலான சுயேட்சைக் குழு, (16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கு வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்கள் தேவை எனக் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைகளுக்கான தேர்தல்களை கண்காணிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படும் பட்சத்தில் நாம் அதனை வரவேற்போம் என்று -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை, வவுனியா நகர சபை தேர்தல் ஓகஸ்ட் எட்டாம் திகதியன்று

கொழும்பு, ஜூன் 26

யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபையின் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

இவ் இரு தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் கால அவகாசம் நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்ததை அடுத்து, தேர்தல் நடைபெறும் தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்தல்களுக்கு வேட்புமனுக்கள் ஏற்கும் நடவடிக்கைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தென்மராட்சியில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டக் கருத்தரங்கு நாளை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (207)

General Information & Communication Technology
Gr 10, 11 & A/L
By
Mr. S.Branavan
(B.A[Hons], MACS, Dip. in Comp.Sys.Design[NIBM])
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845
கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.

புதுக்கடை திறப்பு விழா
எம்மால் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கும்
8.45 மணிக்கும் இடைப்பட்ட
சுபவேளையில் மல்லாகம் சந்தியில்
"ரிப் ரொப் கிறீம் ஹவுஸ்"
திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை எமது
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
K.K.S. றோட், மல்லாகம். க.கந்தசாமி.

பணியாளர் தேவை
கனடாவில் வசிக்கும் நோய்வாய்ப்பட்டிருக்கும் எனது அப்பாவையும், வயது முதிர்ந்த அப்பம்மாவையும் நன்கு பராமரிக்கக்கூடிய 18 வயதுக்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு:- சுகிர்தா பாலச்சந்திரன் (மகள்)
T.P:- 0016138431156
(86601)

## கலந்துரையாடல்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் எமது பாரவூர்தி உரிமையாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சம்பந்தமாக வும் எதிர்கால செயற்பாடுகள் சம்பந்தமாக வும் (A-9 ஊடாக பிரயாணம்) உரிமையாளர்களுடன் நேரடியாக கலந்துரை யாடவுள்ளார்.

எனவே அனைத்து உரிமையாளர்களும் நாளை (27.06.2009) சனிக்கிழமை காலை 8. மணிக்கு சங்கப் பணிமனைக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/559197) நிர்வாகம்,
பா.மா.த.பா.உ.கூ.சங்கம், கோண்டாவில்.

## கண்ணீர் அஞ்சலி

### செல்லையா ஜயந்தன்

(ஆசிரியர், கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை)

எமது நண்பன் செல்லையா ஜயந்தன் நேற்று *(25.06.2009)* வியாழக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
ஐந்தாம் அணி ஆசிரியர்கள்.

## மரண அறிவித்தல்

### அழகரட்ணம் ஜெயரட்ணம்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகரட்ணம் ஜெயரட்ணம் நேற்று (25.06.2009) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காந்திமலரின் அன்புக் கணவரும் ஜெயசுதா, ஜெயப்பிரியா, ஜெயமாலினி, மலர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் நவமணியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,* தகவல்:
*உரும்பிராய்.* மனைவி, பிள்ளைகள்.

## பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பஸ்சேவையில் நேர மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையிலான பஸ்சேவையில் நேர மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை - யாழ். 750 வழி இலக்க பஸ் மாலை 5.30 மணிக்கும், 751 வழி இலக்க பஸ் மாலை 5 மணிக்கும் பருத்தித்துறையில் இருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - கொடிகாமம் 759 வழி இலக்க பஸ் மாலை 5 மணிக்கும், கொடிகாமம் - பருத்தித்துறை 759 வழி இலக்க பஸ் மாலை 5.30 மணிக்கும் புறப்படும்.

பருத்தித்துறை - வட்டுக்கோட்டை 753 வழி இலக்க பஸ் சேவை மாலை 4.15 மணிக்கு இடம்பெறும்.

இன்று வெள்ளிக்கிழமை முதல் இந்த நேரமாற்றம் அமுல்படுத்தப்படும் என பருத்தித்துறை சாலை முகாமையாளர் எஸ்.குலபாலசெல்வம் தெரிவித்தார்.

(50-236)

## மெய்வன்மைப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரியின் வீரசங்கிலியன் மைதானத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சத் தியசீலன் பிரதம விருந்தினராகவும், வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும், கோப்பாய் ஐங்கரன் வெதுப்பக உரிமை யாளர் ஆர்.பொன் குமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(1-204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

இக்ரஃ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இல.83, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி முன்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் லீட்ஸ் நிறுவன யாழ்.மாவட்ட அதிகாரி ஜேசன் ஜெ.செல்வராஜா பிரதம விருந்தினராகவும், முன்பள்ளி இணைப்பாளர் செல்வி கார்த்தியாஜினி, குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் திருமதி தேவ செல்வி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(204)

படிவம்
மட்டக்களப்பு உயர்தொழில் நுட்பக் கல்வி நிறுவன (SLIATE) பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDE)யாப் நெறிமுறைகள் அனுமதிக்கான விண்ணப்ப படிவம் உண்டு.
Bharathy Pathippakam.
430, K. K. S. Road, Jaffna.

அம்மா டிஜிற்றல் வீடியோ & ஸ்ருடியோ
மங்கல விழாக்களை சிறந்த முறையில் வீடியோ படம், புகைப்படம் பிடித்திடவும், புகைப்படங்களை கொம்பியூட்டரில் டிசைன் செய்யவும், நவீன முறையில் சூட்கேஸ் அல்பங்கள் குறைந்த செலவில் பைன்ட் பண்ணியும் (கட்டி) கொடுக்கப்படும்.
இல.28, வேம்படி வீதி,
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை,
யாழ்ப்பாணம்.
T.P. 0777111530

## தவறிவிட்டது

மயிலங்கூடல் , இளவாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய வாமதேவன் பகீதரன் என்பவரின் தேசிய அடையாளஅட்டைக்கு (820843592V) விண்ணப்பித்த சிட்டையும் (அடிக் கட்டை), வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் அடங்கிய பேர்ஸ் இளவாலைக்கும் சுன்னாகத்திற்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் யாழ்ப்பாணப் பணிமனையிலோ அல்லது 0718565675 என்ற தொ.பே இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

## ஒத்துமாறல்

புத்தளம் பாடசாலை ஒன்றில் ஆரம்பப் பிரிவு ஆசிரியை யாழ்.மாவட்ட பாடசாலை ஒன்றிற்கு ஒத்துமாறவிரும்புகிறார்.
தொடர்பு - 0775339926

வீடு வாடகைக்கு
நல்லூர் முத்திரைச்சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு - [illegible]

VACANCIES
கணினி விரிவுரையாளர் (பெண்) பகுதி நேரம்
(For School Children Gr 6 - Gr 9)
MS Office, DTP தெரிந்தவர்கள் CVயுடன் நேரில் வரவும்
பெண் லிகிதர் (Clerk) CV, கல்வித் தகமைகளுடன் நேரில் வரவும்
ஆங்கிலம், கணினி அறிவு இருப்பது விரும்பத்தக்கது.
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845
கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.

## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமதேவன் ஜெனிற்றோ நிரோஜன் (K.J.)

(பழைய மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம், ஊழியர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமதேவன் ஜெனிற்றோ நிரோஜன் 21.06.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிர்காமதேவன் (Mercantile Security Service) - செல்விராணி (முன்னாள் ஊழியர், பரந்தன் இரசாயனக்கூட்டுத் தாபனம்) தம்பதியினரின் அன்புமகனும், அனிற்றோ நீரஜா (Instructor, Dept.of Computer Science , University of Jaffna), லொயட் நிதர்சன் (பழைய மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திரு.திருமதி. சவிரிமுத்து, காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் அகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26/06/2009) வெள்ளிக்கிழமை பி.பகல் 3 மணிக்கு அடைக்கல மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல - 100, வேம்படி வீதி,* தகவல்: சு.கதிர்காமதேவன்(தந்தை).
*யாழ்ப்பாணம்.* *(86608)* T.P 0779352411

### கணபதி சின்னப்பு



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னப்பு நவாலி வடக்கில் நேற்று (25.06.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - நாகாத்தா தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் பாலநாகம்மா, புஸ்பராணி (பிரான்ஸ்), செல்வராணி (பிரான்ஸ்), வசந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன் (யாழ்.மாநகரசபை), சந்திரசேகரம் (பிரான்ஸ்), அரசரட்ணம் (பிரான்ஸ்), மகேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரன் (பிரான்ஸ்), மதுராந்தன், மயூரதி, அரவிந்தன் (பிரான்ஸ்), துஷாந்தினி (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்), வாசுகி (பிரான்ஸ்), கபிலன் (பிரான்ஸ்), கர்ணன் (பிரான்ஸ்), அபிஸன் (பிரான்ஸ்), லக்சனா (பிரான்ஸ்), அபிநயா (பிரான்ஸ்), மயூரி, தர்சன் (இந்தியா), கிருசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிராம் (பிரான்ஸ்), வைஸ்ண[illegible] (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கிழக்கு, கொத்துக்கட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நவாலி வடக்கு,* மருமக்கள்: அ.மகேந்திரன்
*நவாலி.* *(86613)* வ.மகேசன்.

### சின்னத்தம்பி நடேசமூர்த்தி

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர், அச்சுவேலி)



அச்சுவேலி தெற்கு, தோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசமூர்த்தி (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் -அச்சுவேலி) 25.06.2009 புதன் கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் லோகநாதன்-நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிறீமதியின் (சித்திரா) பாசமிகு கணவரும் பிருந்தா (சுவிஸ்), பிரசாந்(சுவிஸ்), பிரதீபா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசுந்தரமூர்த்தி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), திவாகரமூர்த்தி, பாஸ்கர மூர்த்தி (பிரான்ஸ்), லோகநாயகி (திருகோணமலை), பத்மநாயகி, வசந்தநாயகி (வவுனியா), சாந்தநாயகி, ஜெயநாயகி (கொழும்பு), கிருஷ்ணநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரகுமார் (சுவிஸ்), பிரசன்னா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரசுவாமி தனபால சிவரஞ்சிதன், காந்தன், பார்த்தீபன்(சவுதிஅரேபியா), விஜயகுமார் (மலேசியா) ஸ்ரீ பதிஜயர், இராசம்மா, தவநேசமணி, குமுதினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆஸ்பத்திரி வீதி. ந.சிறீமதி(சித்திரா)
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. பிள்ளைகள், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## என்று கிட்டும் இந்த ஊடக சுதந்திரம்....?

''யாழ்ப்பாணத்தில் வீசுவது 'வடக்கின் வசந்தம்' அல்ல. அமைதியின் பெயரால் வீசும் புயலே'' - என்ற சாரப்பட அண்மையில் தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைவர் வீ.ஆனந்தசங்கரி வெளிப்படையாகவே தெரி வித்திருந்தார்.

அந்தக் கூற்று முற்றிலும் சரியானது என்பது போல விடயங்கள் அரங்கேறுவது மிகவும் கவலைக்குரியதாகும்.

பயங்கரவாதத்தை அடியோடு அழித்து விட்டதாக மார்தட்டிக் கொண்டு, அந்தப் பின்புலத்தில் யாழ். மாநகர சபைக்கும், வவுனியா நகர சபைக்கும் சுதந்திரமான - சுயா தீனமான - தேர்தலை நடத்தப் போவதாகக் காட்டிக் கொண்டது அரசுத் தலைமை.

சுதந்திரமான - சுயாதீனமான் - ஜனநாயக முறையிலான - தேர்தல் ஒன்றுக்கு மிக அடிப்படையானது கருத்து வெளியிடும் சுதந்திரம் நிலவுவதாகும். அதுவும் தேர்தலை ஒட்டிய கருத்து வெளியிடும் சுதந்திரத்தில் பிரதானமானது ஊடக சுதந்திரமாகும்.

நீதியான தேர்தல் நடத்தப்படும் என அரசுத் தலைமை அறிவித்துள்ள சூழ்நிலையிலேயே மேற்படி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்குரிய கடைசி நாளில் ஊடக சுதந் திரத்துக்கு வேட்டு - ஆப்பு - வைக்கும் 'கைங்கரியம்' யாழ். நகரில் சர்வ சாதாரணமாக அரங்கேறியிருக்கின்றது.

'ஆபத்துக்குள்ளாகும் ஊடக சுதந்திரம்' குறித்து 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களின் நேற்றைய ஆசிரிய தலை யங்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அந்த ஆசிரிய தலையங்கத்தைத் தாங்கி பிரசுரமான நேற்றைய 'உதயன்' நாளிதழின் கணிசமான பிரதிகள் வாசகர்களை எட்ட முன்னரே ஆயுதக் கும்பல் ஒன்றால் பறித்துத் தீ வைத்து எரிக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியரும், ஆசிரியபீட உறுப்பினர்களும் கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

வடக்கில் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெறும் சமயத்தில் ஜனநாயக விரோத சக்திகள் - ஆயுத கலாசாரத்திலும் அச்சுறுத்தலிலும் மூழ்கித் தமது விடயங்களை ஒப்பேற்றும் தரப்புகள் - தமது கைவரிசைகளைக் காட்டத் தொடங்கி விட்டன என்பதற்கு இந்த விவகாரம் ஓர் அறிகுறி; ஆரம்ப எச்சரிக்கை.

குறைந்த பட்சம் இந்தத் தேர்தல்களாவது ஜனநாயகக் கோட்பாடுகளையும் விழுமியங்களையும் மதிக்கும் வகையில் நடத்தி முடிக்கப்படுமா என்ற எதிர்பார்ப்புக்கு - நம்பிக்கைக்கு - ஆப்பு வைப்பது போல இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கின்றது.

புலிகளுக்கு எதிரான யுத்தம், அந்த இயக்கம் முற்றாக அழிக்கப்பட்டதுடன் முடிவுக்கு வந்து விட்டதாக அரசு அறிவித்துள்ள பின்புலத்திலேயே பத்திரிகைகளை - குறிப்பாக ஊடகவியலாளர்களையும், ஊடக வெளியீட்டாளர்களையும் சிறைக்குள் தள்ளி அவர்களுக்கு அபராதம் உட்பட்ட கிரிமினல் செயற்பாடுகளுக்கான தண்ட னையை வழங்கி அவர்களை - அடக்க வழி செய்யும் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை மீளக்கொண்டுவர முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

யுத்தம் முடிந்து விட்டது. அதனால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமையையும், நெருக்கடியையும் இனித் தான் நாடு மோசமாகச் சுமக்க வேண்டியிருக்கும் என்பதும் வெளிப் படை.

அத்தகைய நிலையில் நாடும் மக்களும் மிக மோசமான பொருளாதார இக்கட்டுக்களைச் சந்திக்கப் போகின்றார்கள் என்பது திண்ணம். அத்தகைய சூழலில் அவற்றின் தாற் பரியங்களையும், நாட்டு நிர்வாகத்திலும் ஆட்சியிலும் இடம்பெறும் ஊழல்கள், முறைகேடுகள், குளறுபடிகள் போன்றவற்றையும் ஊடகங்கள் பகிரங்கமாகப் போட்டுடைத்து, அம்பலப்படுத்தி, வெளிப்படுத்தும் யதார்த்தம் இடம் பெறும்.

அப்படியான கட்டத்தில் - மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு வழக்கமாக பயன்படும் யுத்த வெற்றிச் செய்திகள் என்ற களேபரமும் களத்தில் இல்லாத சூழலில் - முறையற்ற ஆட்சி முறையின் மீது மக்களின் கவனம் முழு துமாகத் திரும்புவதும் தவிர்க்க முடியாததாகும்.

இதைப் புரிந்து கொண்டுள்ள ஆட்சித் தரப்பு, மக்களின் கவனத்தை - சிந்தையை - அவதானத்தை - ஆட்சி முறையின் தவறுகள் பால் ஊடகங்கள் திருப்பி விடாமல் தடுப்பதற்காக, முற்கூட்டியே எச்சரிக்கையாக ஊடகங்க ளுக்கு மூக்கணாங்கயிறு மாட்டும் விதத்தில் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைக் கையில் எடுக்க ஆயத்தமாகின்றது.

நாட்டில் நிலவக் கூடிய பொருளாதார நெருக்கடி, ஊழல், முறைகேடுகள் நிறைந்த நிர்வாகம் போன்றவற்றை ஊடகங்கள் பொதுமக்களிடம் அம்பலப்படுத்தும் ஆபத்து இருப்பதால், அப்படி அவை செயற்பட முனையும் போது அவற்றை அப்படிச் செய்யவிடாமல் தடுப்பதற்கான பாது காப்பு அரணாகவே இந்தச் சட்டத்துக்கு மீள் உயிர் கொடுக்கும் எத்தனம் ஒருபுறம் நடக்கின்றது.

மறுபுறம், ஆயுத அச்சுறுத்தல் மற்றும் வன்முறைகள் மூலம் ஊடகங்களை அடக்கி ஒடுக்கும் அராஜகமும் தொடர்கின்றது.

எப்போது திருந்துமோ இந்த் நாடு....? ஆண்டவனுக் குத்தான் வெளிச்சம்....!

## தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று யாழ்.செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயகத் தமிழர் கூட்டணி ஆகியன தமது வேட்பு மனுக்க ளைத் தாக்கல் செய்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சொலமன் சிறில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.எம்.இமாம் மற்றும் தலைமை வேட்பாளர் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆகியோர் அடங்கிய குழு தமிழரசுக் கட்சியின் பெயரில் நேற்றுக்காலை யாழ்.செயலகத்துக்குச் சென்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தது. இதில் 4 பெண் வேட்பாளர்களும் ஒரு முஸ்லிம் வேட்பாளரும் உள்ளடங்குகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (பத்மநாபா) ஆகியன அங்கம் வகிக்கும் ஜனநாயகத் தமிழ்க் கூட்டணி வீ.ஆனந்தசங்கரியைத் தலைமை வேட்பாளராகக் கொண்டு நேற்றுக்காலை வேட்புமனுவைத் தாக்கல் செய்தது. தலைமை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி, அவரது செயலாளர் இ.சங்கையா மற்றும் வேட்பாளர் சிலரும் சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

நேற்று வேட்புமனுத்தாக்கல் செய்தோரின் விவரம் வருமாறு:

**தமிழரசுக்கட்சி**

முடியப்பு றெமிடியஸ் (தலைமை வேட்பாளர்), கந்தையா தங்கராஜசிங்கம், பெஞ்சமின் ஜேக்கப், அந்தோனிப்பிள்ளை மேரியம்மா, கார்த்திகேசு பீதாம்பரம், ஜனப் ஜமால்டீன் முகமட் அலிம், அருளப்பு கொர்ணேலியா, தம்பிமுத்து துரைமணி, வல்லிபுரம் கந்தசாமி ஜெயபாலன், சுப்பிரமணியம் சோதிலிங்கம், அருமைநாதன் தவநாதன், ஜோண் ஜோர்டன் யோகராசா, அன்னலிங்கம் உதயகுமார், அரியகுட்டி பரம்சோதி, நடராஜா இராஜதேவன், மரியகொறற்றி அன்னர், கார்த்திகேசு நடராசா கனகசபை, தேவராசா பஸ்ரின்ராஜ், வீரசிங்கம் சிவகுமார், சுப்பிரமணியம் உதயகுமார், கந்தசாமி பரமநாதன், தியாகராசா செல்வரஞ்சன், பெஞ்சமின் சவுந்தரசிங்கம் சுதர்சன், செல்வி சிவகலா சோமசுந்தரம், ஸ்ரீஸ்கந்தராஜா பரணிதரன், கதிரவேலு யோகேஸ்வரன், பரமசிவம் துஷ்யந்தன், சிற்றம்பலம் பிரதீபன், திருமதி உஷா நந்தினி நடராசா.

**ஜனநாயகத் தமிழர் கூட்டணி**

ஆனந்தசங்கரி வீரசிங்கம் (தலைமை வேட்பாளர்), இராஜதுரை புஸ்பராஜா, வ.இ.கதிரேசு இரத்தினசபாபதி, சின்னத்தம்பி இரத்தினசபாபதி, தர்மலிங்கம் நடனேந்திரன், இராசையா சங்கையா, சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ், குணசிங்கம் அமலகுணசீலன், செல்லையா விஜயரட்ணம், கந்தையா செல்லன், திருநாவுக்கரசு ஸ்ரீதரன், ஜெகரத்தினம் சிற்சபாநாதன், ஆசீர்வாதம் பெர்ணாண்டோ, செல்வி அன்ரன் ராஜ் ஜோண் சார்மிலா, கந்தையா சிவராஜா, காளிக்குட்டி ஜெயக்குமா ரன், கந்தையா ரவி, சிவசுப்பிரமணியம் திருக்கேதீஸ்வரன், நடராசா மதி அழகராசா, செல்வி தவகுலசிங்கம் தர்ஜினி, திருமதி இதயநிலா ரஜிகரன், ஜெயபாலன் ஜெசிந்தன், வசந்த சந்திரன் எட்வின் யூலியஸ், உலோக ராசா மயூரன், கேசவன் செந்தில்ராஜா, தம்பிராசா நிமல்ராஜ், ஸ்ரீரஞ்சன் நிஜாசன், சந்தனராசா சதீஸ்கண்ணா, பரமேஸ்வரன் இராகுலன்.(50-111-224)

## வடமாகாணத்தில் 11.5 பில்லியன் ரூபா செலவில் 3 லட்சத்து 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும்

கொழும்பு, ஜூன் 26

மூன்று வருட வேலைத்திட்டத்திற்கமைய வடமாகாணத்தில் 11.5 பில்லியன் ரூபா செலவில் புதிதாக 325,000 வீடுகள் அமைக்கப்படவிருப்பதாகவும் இதேவேளை, அங்குள்ள 150,000 வீடுகள் புனர மைத்துக் கொடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பாக வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் விசேட செயலணிக் குழுவின் தலை வரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்திப்பொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மோதல்களால் பாதிக்கப்பட்ட வடபகுதியின் பெருந்தெருக்கள், மின்சார விநியோகம், வீடுகள், நீர் விநியோகம், விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்திகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் இச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண ஆளு நர் டிக்சன் டெல பண்டார, மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், மாவட்டச் செயலாளர் மற்றும் மீள் குடியேற்றம் மற்றும் மனிதநேய விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர். (50)

## இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கப்பல்கள் மூலம் உதவிகளை ஆஸி. வழங்க வேண்டும்

### விக்டோரியா மாநில அமைச்சர் கோரிக்கை

பேர்ண், ஜூன் 26

போரினால் பாதிக்கப்பட்ட நிலையில், அடிப்படை வசதிகள் ஏதுமற்று முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் வகையில் உணவு, மருந்து மற்றும் அடிப்படை தேவைகளுக்கான பொருள்கள் அடங்கிய கப்பல் ஒன்றை ஸ்ரீலங்காவுக்கு அனுப்பி வைப்பதற்கு அனுசரணை வழங்கும்படி அவுஸ்திரேலிய அரசினை அந்நாட்டின் விக்டோரிய மாநில அமைச்சரும் விக்டோரிய மாநில திட்டமிடல் துறையின் செயலருமான ஜெனி மிக்கக்கோஸ் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித்திற்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

உலகில் இன்றைய நாளில் பார்க்கப்படுகின்ற மிகப் பயங்கரமான மனிதப் பேரவலமாக இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரத்தினை கூறலாம். அவ்வளவுக்கு மோசமான நிலைமையை இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள். அவர்களின் இந்த நிலைமையை உலகின் சகல ஊடகங்களும் மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளன.

ஆகவே, அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் பாரிய மனிதப் பேரவலத்தினை எதிர்நோக்கியுள்ள அந்த மக்களுக்கு உதவுவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த மக்களுக்குத் தேவையான உதவிகள் அடங்கிய கப்பல்கள் அங்கு இலங்கைக்கு சென்று அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் நேரடியாக சென்றடைவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அவுஸ்திரேலிய அரசு உதவ வேண்டும்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக அங்கு செல்லும் அனைத்துலக தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், அந்த மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு உதவிகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தினை அவுஸ்திரேலிய அரசு கோரவேண்டும்.

அங்கு மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் நடைபெறுகின்றனவா என்பதனை சுதந்திரமாக விசாரணை செய்வதற்கு மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் என்றும் ஸ்ரீலங்கா அரசை அவுஸ்திரேலிய அரசு கோர வேண்டும் என்றார் அவர்.

### நாளை

| | |
|---|---|
| ஆனி 13 | 27.06.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப.2.34 வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | மாலை 05.24 வரை |
| சுபநேரம்: | 02.55 - 04.25 |
| ராகுகாலம்: | 08.55 - 10.25 |

## 'வசந்தம்' தமிழ்த் தொலைக்காட்சி சேவை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 26

ஐ.ரீ.என்.தொலைக்காட்சிச் சேவை வழங்கும் தனித்தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையான வசந்தம் தொலைக் காட்சிநேற்று வியாழக் கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப தமிழ் பேசும் மக்களுக்காக இந்த தொலைக் காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.40மணி அளவில் உத்தியோகபூர்வமாக இந்தத் தொலைக்காட்சிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அமைச்சர்களான அதாவுல்லாஹ், அமீர் அலி, விநாயகமூர்த்தி முரளீதரன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஐ.ரீ.என் தொலைக்காட்சிச் சேவையின் தலைவர் அநுர சிறிவர்தன இதற்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் எஸ்.குலேந்திரன் இதன் உதவி முகாமையாளராகவும் எம்.சித்தீக் ஹனீபா செய்தி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றனர்.

வசந்தம் தொலைக்காட்சியின் ஒலி ஒளி பரப்பு வீ.எச்.எப் 9 அலைவரிசை ஊடாக தற்போது மேல் மாகாணத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் விரைவில் நாடளாவிய ரீதியில் சேவையை இடம்பெறச் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை வசந்தம் தொலைக் காட்சிச் சேவை ஊடாக நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படவுள் ளன.

தமிழ் பேசும் இரசிகர்களைக் கவரும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்கள், செய்திகள், அரசியல் விவகாரங்கள், சிறுவர் நிகழ்ச்சிகள் உட்பட பல நிகழ்ச்சிகளை ஒலி ஒளி பரப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதியம் 1 மணி, மாலை 6 மணி, இரவு 8 மணி என செய்திகள் இதன் ஊடாக ஒலி ஒளிபரப்பப்படுகின்றன. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinity College And University

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)
Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433 / 0777-110862 (மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)


கீழ்வரும் பட்டப்படிப்புக்களுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

**Bachelors Degree :-**

- Bachelor of ICT (B.ICT) (Three Years + ICT Training)
- Bachelor of Business IT (B.B.IT) (Two Years +Training)
- Bachelor of Business Management (BBM) (Two Years +Training)
- Bachelor of Commerce (B.Com) (Two Years +Training)
- Bachelor of International Business (B.IB) (Two Years +Training)
- Bachelor of Computer Science - B.Sc (Hons) (Two Years +ICT Training)

**Masters Degree :-**

- Master of ICT (MICT) (1 ½ Years + Project Training)
- Master of Science (IT) (M.Sc in IT) (1 ½ Years + Project Training)
- Master of Commerce (M.Com) (1 ½ Years + Project Training)



அனுமதி விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**Trinity University Affiliations...**

- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Klt.128. Recognized by UNESCO.
- Member of the United Interdenominationl Church

O/L அல்லது A/L பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரமுள்ள இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் பின்படிப்பை தொடரமுடியும்

வகுப்புக்கள் யாவும் வார மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும். தொழில் புரிவோருக்கான விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன

- எமது இப் பட்டப்படிப்பு, அனைத்து வருட பரீட்சைகள் யாவும் எமது பல்கலைக்கழக உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
- யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பட்டப்படிப்புக்களை நிறைவு செய்த பின்னர், USA,UK,CANADA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் அல்லது கல்லூரிகளில் பட்டப்பின்படிப்பை தொடரமுடியும். இதற்கான Visa ஒழுங்குகள் யாவும் எமது பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரிவினால் மாணவர்களுக்கு செய்து தரப்படும்.
- பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் UK அரசின் அங்கீகாரம் உள்ள Association of Computer Professionals நிறுவனத்தில் நீங்கள் உறுப்பினராக இணைந்து உங்கள் கல்வித்தராதரத்தை சர்வதேச அங்கீகாரமுடையதாக்கி கொள்ள முடியும்.
- தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் எம்மால் செய்து தரப்படும்.
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கான விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.


## நாளை மின்தடை

குடா நாடுமுழுவதும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நாளை சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்தடை நடைமுறைப்படும் என்று இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் கிளையினர் அறிவித்துள்ளனர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 23 . 12 . 1953

இறைவன் அடியில் 27 . 05 . 2009

### திருமதி சுந்தரலிங்கம் சதாலட்சுமி

அகிலம் போற்றும் ஆருயிர் அன்னையே!
தினம் தினம் உந்தன் ஞாபகம்
பிள்ளைகள், கணவன் என்று நோயிலும் போராடி
உன்னை உருக்கி கல்விக்கு ஒளிவிளக்கேற்றி
எம் எல்லோரையும் பரிதவிக்க விட்டு சென்றாய்
எத்தனை பிறப்பு எடுத்தாலும் நாம்
உன்னைக் காணாது உயிர்கள் அழியாது.

கடந்த [27.05.2009] அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுககும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று [26.06.2009] வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல.15, [illegible] ஒழுங்கை, [illegible]. (86612)

நினைவுகளுடன்: கணவர், பிள்ளைகள்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் ஐயம்பிள்ளை நாகராசா



தோற்றம் 24-06-1956

மறைவு 13-05-2009

கடந்த (13.05.2009) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பவிளக்கு ஐயம்பிள்ளை நாகராசா அவர்களின் வீட்டுக்கிருத் திய கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (26.06.2009) வெள்ளிக் கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு. (86548)

மனைவி, பிள்ளைகள், மச்சான்மார்.

## தேவை

எமது நிறுவனத்துக்கு போட்டோக் கொப்பி, கணனி இயக்கத் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 778, K.K.S. Road, Jaffna.

## முக்கிய கலந்துரையாடல்

2004 - 2006இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி ஆசிரிய நியமனப் பரீட்சைக்குத் தோற்றாத வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் இன்று (26.06.2009) வியாழக்கிழமை காலை 8 - 10 மணிக்கு யாழ்.பெருமாள் கோயில் முன்றிலில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். பட்டதாரிகள் செயற்குழு.

## MINISTRY OF IRRIGATION AND WATER MANAGEMENT

### CENTRAL ENGINEERING CONSULTANCY BUREAU

### WANTED OFFICE SPACE ON RENT

Central Engineering Consultancy Bureau requires approximately 2,500 ft² of Office Space within or in close proximity to Jaffna town for its Jaffna Base Office.

The building should:

* be situated in close proximity to the Jaffna town with a main road frontage or have access of short walking distance from a main road.
* have adequate space for parking of three (03) vehicles.
* have pipe borne water, and electricity supply.
* have two toilets in each floor, if a storeyed building.
* have three rooms (to be used as circuit rooms for visitors) with at least one attached toilet, with separate access.
* have boundary wall or security fence.

Owners of buildings that meet the above requirement are requested to forward their Quotations along with a copy of the site plan of the building and the expected rental, by registered post to the **General Manager, Central Engineering Consultancy Bureau, 415, Bauddhaloka Mawatha, Colombo-7**, to reach him, on or before 2.00p.m on 08 July 2009. The words **" Quotation for Office Space - Jaffna Base Office"** should be written on the top left corner of the cover containing the quotation.

**Chairman,**
**Central Engineering Consultancy Bureau**

## கோழி வளர்ப்பு பயிற்சிபெற்ற 18 பேருக்குக் கோழிக்கூடுகள்


நவாலி, ஜூன்26

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கோழி வளர்ப்பு பயிற்சி பெற்ற விசேட தேவைக்குரியவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்கூடும் கோழிகளும் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்குத் தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

அ.சுதர்சன் ஜே/133, செ.தங்கராசா ஜே/140, அ.சியான் றதீபன் ஜே/155, பொ.யமலராணி ஜே/154, ச.யூட்றொபின்சன், க.செபமாலை ஜே/155, பி.அன்னம்மா ஜே/155, ர.றட்ணரதி ஜே/142, க.ஜெயராசா ஜே/145, சு.மல்லிகாதேவி ஜே/142, மா.சிவனேசசெல்வன் ஜே/135, மா.புகனேந்திரன் ஜே/144, க.மகாதேவன் ஜே/144, ப.பங்கையற்கரசி ஜே/147, கு.மார்க்கண்டு ஜே/147, க.மார்க்கண்டு ஜே/157, எ.மேரி ஜெனிற்றா ஜே/152, பி.சோபிதா ஜே/155. (203-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் கல்விப் பிராந்தியத்தில் 17 ஆண்டுகள் சித்திரக்கலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பெரும்பணியாற்றி, அகவை அறுபதில் மகிழ்வுடன் ஓய்வுபெறும்

உயர்திரு. **நாகலிங்கம் சுந்தரலிங்கம்** அவர்கள்

Dip.in Art (University of Kelaniya)
S.L.T.S-1

மேலும் பணி பல செய்து பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்....

(86606)

கல்வி அபிவிருத்திப் பிரிவு, யாழ்ப்பாணம் கல்வி வலயம்.

ஆசிரிய ஆலோசகர் வட்டம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 ★ 07 ★ 1941



உதிர்வு 27 ★ 05 ★ 2009

### அமரர் மாணிக்கம் தில்லைவிநாயகம்

அன்பாலும் பண்பாலும் எல்லோரையும் அரவணைத்து
உறவிற் கலந்து உணர்வில் நிறைந்து
எம் உயிரிற் பதிந்த அப்பாவே! எம்மை
மீளாத் துயரில் ஆழ்த்தி எங்கு சென்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(86602)

சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

மறக்கமுடியா நினைவுகளுடன்: உங்கள் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன் நூலின் மதிப்புரையையும் சைவப் புலவர் நமசிவாயம் கல்யாணி ஆய்வுரையையும் ஆற்றவுள்ளனர். (204)

## விக்னேஸ்வராக் கல்லூரியில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 26

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த வருடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தமிழ் பாடத்துக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர்களான ஈ.குமரன், அஜந்தன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் விரிவுரைகளை நிகழ்த்துவர். (204)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### வைத்தியசாலை மேற்பார்வையாளருக்கு வினைத்திறமைகாண் பரீட்சை

குருநகர், ஜூன் 26

அரச வைத்தியசாலைகளில் வைத்தியசாலை மேற்பார்வையாளர்களாக சேவை புரிபவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2008 எதிர்வரும் ஒக்ரோபர் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது என அரச பொதுச் சுற்றுநிருபம் மூலம் கொழும்பு சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு அறிவித்துள்ளது.

வைத்தியசாலை மேற்பார்வையாளர்களாக நியமனம் செய்யப்பட்டு மூன்றாம் சம்பளப்படிமுறையை அடையாதவர்களும் இதுவரை இப்பரீட்சையில் சித்தியடையாமலிருக்கும் உத்தியோகத்தர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

விண்ணப்பங்களை உடனடியாக திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (203-51)

### மணிமேகன் முன்பள்ளியின் விளையாட்டு விழா ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் இ.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி க.சதீஸ்குமார் பிரதம விருந்தினராகவும். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் அவரது பாரியார் திருமதி பாமினி, வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.குகநேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (9)

### ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஜூன் 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச் சுடர் ஆன்மீகச் சஞ்சிகையின் ஆனி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் கே. அருள்லிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மாவும், மதிப்பீட்டுரையை ஆசிரியர் க. நவரத்தினமும் நிகழ்த்துவர் (203-236)

## அண்ணா நிறுவனத்தின் பொன்விழாவும், மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

அண்ணா நிறுவனத்தின் பொன்விழா நிகழ்வும் மலர் வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளன.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் பங்குபற்றுவார்.

மலர் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சி.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். நூலின் முதற் பிரதியை யாழ்.பல்கலைக்கழக நூலகர் செல்வி சி.அருளானந்தம் பெற்றுக் கொள்வார்.

வாழ்த்துரைகளை வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், இளைப்பாறிய ஆசிரியர் நா.பொன்னையா, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடப் பீடாதிபதி க.தேவராஜா, இணுவில் பொது நூலக கொழும்புக் கிளைத் தலைவர் சு.உருத்திரன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோர் வழங்குவர். (203-55)



மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்தது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சொலமன் சிறில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.எம். இமாம் மற்றும் தலைமை வேட்பாளர் சட்டத்தரணி எம்.றெமிடியஸ் ஆகியோர் வேட்புமனுவைத் தாக்கல் செய்ய யாழ்.செயலகத்துக்கு வந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: லக்ஸ்மன்)

## குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்கு 12 தடவைகள் பொருள்கள் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாவட்டத்தில் இருந்து ஏ-9 வீதியூடாக 12 தடவைகளில் 2 ஆயிரத்து 118.568 மெற்றிக் தொன் பொருள்கள் தென் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.செயலகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12ஆவது தடவையாக அனுப்பப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விவரம் வருமாறு:

வெங்காயம் 109.250 மெற்றிக் தொன், பனை உற்பத்திப் பொருள்கள் 0.500 மெற்றிக் தொன், புகையிலை 3 மெற்றிக் தொன், கடலுணவுகள் 13 மெற்றிக் தொன். (203)

## நெசவுக் கைத்தொழில் பயிற்சிக்கு தகுதியானோரிடம் விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி, ஜூன் 26

யாழ்.நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒருவருட கால அடிப்படை பயிற்சி நெறி தரம் 8 சித்தியடைந்தவர்களிடம் இருந்தும் இரண்டு வருட கால நெசவுப் பயிற்சிக்கு ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் சுயவிவரம் மற்றும் கல்வித் தகைமை உள்ளடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலை, அரசடிச் சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பொருத்தமான வேலைவாய்ப்பு வசதியைக் கொண்ட இலவச பயிற்சிநெறி மத்திய அரசின் கீழ் நடைபெறுகின்றது என கல்லூரியின் பதில் பணிப்பாளர் திருமதி பு.கணேஸ்வரன் அறிவித்துள்ளார். (203-11)

## பண்ணை வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

பண்ணை வீதி தார் கலவை மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்த வீதி புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

இவ் வீதியில் சேதப்பட்டிருக்கும் பகுதிகள் தார்கலவை மூலம் சீர்செய்யப்பட்டு வருகின்றன. (203-224)




யாழ்.றோட்டறிக் [illegible] 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை [illegible]யிடம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கைதடி சச்சிதானந்தா ஆச்சிரம ஈழத்துக் காசிலிங்கேஸ்வரப் பெருமான் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய தட்க்ஷணாமூர்த்தி, நவக்கிரகப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக் கிழமை மு.ப. 11.03 மணி தொடக்கம் பிற்பகல் 12.03 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். அன்றையதினம் பிற்பகல் 3 மணி தொடக்கம் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (201)

* * *

கோப்பாய், ஜூன் 26

ஊரெழுமேற்கு சக்திபுரம் சிவபூரணி காளி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நண்பகல் 12 மணிக்கு மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் ஆலய திருப்பணிச் சபையினால் வெளியிடப்படவுள்ளது. (201-72)

* * *

கோப்பாய், ஜூன் 26

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (201-72)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடமராட்சி புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-78)

* * *

வண்ணை, ஜூன் 26

அளவெட்டி, நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய ஆனி உத்தர நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக, ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார். (204-160)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 26

அராலி - வண்ணப்புரம் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

வடமராட்சி, ஜூன் 26

தம்பசிட்டி நாவற்கலட்டி துர்க்கை அம்மன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குரு பூசை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (204-236)

* * *

வடமராட்சி, ஜூன் 26

தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-236)

# அமைச்சர்களைக் கொலை செய்யத் திட்டம் தீட்டிய சந்தேக நபர்களுக்குத் தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 26

அமைச்சர்கள் கெஹலிய ரம்புக்வெல, ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டி ருந்த 22 பேர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்த நிலையில் உரிய ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன என இவர்களைத் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வந்த பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்

இதனையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பிரதம நீதிவான், சந்தேக நபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை நீதிமன்றுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார். (சி)


## ஆறாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 ✱ 11 ✱ 1933



உதிர்வு 03 ✱ 07 ✱ 2003

### அமரர் கந்தையா கனகரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி: சதுர்த்தி

எங்களுக்கு நல்வழி காட்டிய அப்பாவே
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே
என்றென்றும் எங்கள் உயிர் உள்ளவரை
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த நினைவுகள்
எம் மனதைவிட்டு அகலாது.

"அரன்மனை"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/559141)


## மின் இணைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நாவற்குழி, ஜூன் 26

• நீர்வேலி, கரந்தன் வீதி முதலாம் ஒழுங்கையின் புதிய மின் இணைப்புக்காக ஒரு இலட்சம் ரூபாவை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்துள்ளார்.

நீர்வேலி சென். மைக்கல் சனசமூக நிலையத்தின் கோரிக்கையை அடுத்தே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(203-288)


## THE DANISH REFUGEE COUNCIL (DRC) in Sri Lanka

### Vacancy

**Protection Field Officer (two posts) – Jaffna**

The Protection Field Officer will work as a member of the Jaffna district team under the leadership of the District Coordinator with support from the country Protection Team. He/ She will play a proactive role in protection monitoring and response, human rights awareness raising / training, and community-level psychosocial activities.
The position is in Jaffna and is field based.

**Closing Date:** **08 July 2009**

**Qualifications:**

- University Degree (ideally law, politics or social studies) and 1 year of relevant experience or A levels + 3 years of relevant experience
- Knowledge of human rights principles
- Knowledge of government structures
- Confidence and ability to liaise with Government, UN Agencies, NGOs and Communities;
- Flexibility, enthusiasm and a creative approach
- Ability to organize training and awareness raising events
- Advocacy skills
- Experience in community mobilisation and approaches to psychosocial support in the community
- Computer skills in MS Office (Word, Excel, PowerPoint) and email
- Excellent oral and written communication skills in English and local languages are essential requirement;

The appointment will initially be for a period of 6 months with potential for renewal. Female candidates are especially encouraged to apply. Please fax or send via post a Curriculum Vitae together with contact telephone number and names of three non-related referees to the address below. The position applied for should be indicated on the top left hand corner of the envelope in applications sent by mail.

Head of Office, Jaffna
Danish Refugee Council
456, Main Street
Chundikuli, Jaffna
Fax No: 021 222 7986

PLEASE NOTE:

- *Candidates that do not meet the listed qualifications will not be considered*
- *Only short listed candidates will be contacted for an interview*
- *This is a re-advertisement; candidates who applied earlier do not need to apply again*





## சாவகச்சேரி கல்வயல்

### ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம்-2009

**கிரியாகால நிகழ்வுகள்**

ஆனி மாதம் 13 ஆம் நாள் 27.06.2009 சனிக்கிழமை

**விநாயகர் வழிபாடு, சாந்தி**

28.06.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு

**கொடியேற்றம்**

06.07.2009 திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

**இரதோற்சவம்**

07.07.2009 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு

**தீர்த்தோற்சவம்**

08.07.2009 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு

**பூங்காவனம்**

09.07.2009 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு

**பிராயச்சித்த அபிஷேகம்**

10.07.2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு

**வைரவர் சாந்தி**

(86547)

தேவஸ்தான பிரதம குரு
(பிரதிஷ்டா சிரோமணி)
சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்).
பரிபாலனசபை.



## 20 KV மின் பிறப்பாக்கி வழங்கலுக்கான கேள்விக் கூறுவிலை

எமது சங்கத்திற்கு 20 KV மின் பிறப்பாக்கி ஒன்று தேவை. வழங்கக் கூடியவர்கள் மின்பிறப்பாக்கி தொடர்பான விவரங்களையும் விலையையும் குறிப்பிட்டு 07.07.2009 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**பொது முகாமையாளர்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/559187)



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தையா



சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா (24.06.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், சித்திரா, சாந்தி, ஜெகதீஸ்வரன், ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அர்ச்சுனர், சிற்றம்பலம், சின்னத்துரை, இராசையா, குணரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ரஞ்சன், ஸ்ரீரங்கநாதன், ரஞ்சனா, சாந்தா ஆகியோரின் மாமனும் கஜானு, சாரங்கா, துவாரகா, கம்சிகா, நிசந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"[illegible]"
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (86543)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## உதவி புரிந்த அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுதல்களும்

நாட்டில் ஏற்பட்ட கொடிய போர் காரணமாக வன்னியில் இருந்து கடல் வழியாக மக்கள் படகுகள் மூலமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். அந்த வகையில் நாமும் எனது குடும்பத்தினருடன் 21.04.2009 பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தோம். இந்த நிலையில் நான் மட்டுமல்ல. இங்கு வந்த மக்களின் மனங்களில் ஒருவித ஏக்கம், அச்ச உணர்வு. ஆனால் இந்த மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக இராணுவத்தினர் மிகவும் அன்புடன் வரவேற்றார்கள். உறவுகளையும் உடைமைகளையும் இழந்த நிலையில் சொல்லொணாத் துன்பத்துடனே இங்கு வந்தோம். எமக்கு உணவும் குடிதண்ணீரும், சிறுவர்களுக்கு பிஸ்கெற்யாவும் வழங்கினார்கள். பின்னர் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கவைக்கப்பட்டு 23.04.2009 அன்று நெல்லியடி ம.ம.வித்தியாலத்திற்கு மாற்றப்பட்டோம். அங்கு எம்மைப் பாசமுடன் வரவேற்ற படையினர், உதவி அரச அதிபர் (கரவெட்டி), கிராமசேவகர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் எமக்கு உதவிகளை இரவு, பகல் பாராமல் வழங்கினார்கள். இவர்களைப் பாராட்டி நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் இந்த மக்களுக்குத் தங்குவதற்குத் தங்கள் பாடசாலையை வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களையும், பொலிஸாரையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள், யாழ். மறைமாவட்டக் குருக்கள் - கன்னியர்கள், இந்து கலாசார அமைப்புகள், சத்தியசாயி பாபா நிறுவனத்தினர், வணிக கழகத்தினர் மற்றும் எமது உடல் ஆரோக்கியத்தில் மிகவும் அக்கறை காட்டிய வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரப் பிரிவினர், தபால் ஊழியர்கள், மக்கள் வங்கி - இலங்கை வங்கி - எச்.என்.பி. வங்கி - கொமர்ஷல் வங்கி இப்பகுதி மக்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இந்த முகாமில் மொத்தம் 473 குடும்பங்கள், 1252 மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இந்த அமைப்புகள் அனைவரையும் ஒன்றிணைத்து வழி நடத்திய கரவெட்டி அரசாங்க அதிபர் அவர்களுக்கு மீண்டும் நன்றிகள்.

இன்னும் நாம் அறியாமல் எத்தனையோ விதமான உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள். இவர்களையெல்லாம் வழிநடத்தி ஆசிபுரிந்த இறைவனுக்கும் இந்தவேளையில் நன்றியினைக் கூறிக்கொள்கின்றோம்.

நலன்புரி நிலையம், இராமாவில், கொடிகாமம். ஏ.தனிஸ்லாஸ்.

## நோயாளர்களும் மருந்துகளும்

யாழ்.போதனா வைத்தியசாலை மக்களுக்கு அளித்துவரும் சேவை அளப்பரியது. சாதாரண ஊழியர் முதல் மருத்துவ நிபுணர் வரை தமது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்வது போற்றுதற்குரியது. ஓரிரு குறைகள் இருப்பினும் நோயாளர்கள் நன்கு கவனிக்கப்படுகின்றனர். இருப்பினும் காலம் காலமாகச் சில மருந்துகள் வெளிநோயாளர்களுக்குக் கிடைப்பதில்லை. அவை கொழும்பிலிருந்து மேலிடத்தால் தேவைக்கேற்ப அனுப்பப்படுவதில்லை என்பது மக்களுக்குச் சொல்லப்படும் செய்தியாகும்.

ஆனால், இம்மருந்துகள் தனியார் மருந்தகங்களில் பலதரப்பட்ட விலைகளில் விற்கப்படுகின்றன. மருந்துகள் மட்டுமல்ல. விற்றமின் குளிசைகள், டொனிக்குகள், பால்மா வகைகள் இதில் அடங்கும்.

தவிர குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து கிளினிக் கொப்பிகளுடன் அதிகாலை 5 மணிக்கு முன்பே படையெடுக்கும் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவு வாசல் 6 மணிக்குத் திறக்கப்படும்வரை எதிர்ப்பக்கமுள்ள நடைபாதையில் காத்திருப்பர். அவர்களுள் ஆளுமை படைத்த ஒருவர் கொப்பிகளை வாங்கி ஓடராக அடுக்கி 6 மணி எப்ப வருமெனக் காத்திருப்பர். கேற் திறந்ததும் தடை தாண்டி ஓட்டப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் போல் ஓடிச்சென்று வாங்கிலில் இடம்பிடித்து விடுவர். இச்செயற்பாடுகள் கிளினிக் கொப்பிகாரர்களுக்குப் பழக்கப்பட்டதொன்றாகும். வைத்தியசாலை ஊழியர்கள் காலை 7.30 மணியளவில் வருவார்கள். பின்பு வைத்தியர்கள் 8.30 மணியளவில் வருவர். ஒரு நோயாளி சராசரியாக மருந்து எடுக்கும் முயற்சியில் 6 மணி நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது. ஆனால் வைத்தியர் எழுதும் மருந்துகளில் சில வைத்தியசாலையில் கிடைப்பதில்லை. மருந்தாளர் வெளியில் வாங்குங்கோ என்று சொல்லிவிடுவார்.

தனியார் மருந்தகங்கள்தான் தஞ்சம் எனத் தட்டுப்பாடான மருந்துகளைக் கூடிய விலையில் வழங்கவேண்டிய நிலை. தவிர இத்தனியார் மருந்தகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அத்துறையில் பயிற்சி பெற்றவர்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது. நோயாளர்களுக்குரிய மருந்து வழங்கப்படுவதில் அதன் உரிமையாளர் கூடிய கவனம், அக்கறை எடுக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களில் விற்பனைக்குப் பொறுப்பாக உள்ள பெண் பிள்ளைகள் மருந்தின் பெயரைப் புரிந்துகொள்ளமுடியாது. பிறர் உதவியை நாடி நிற்பதையும் அவதானிக்கமுடிகிறது. அதனால் சரியான மருந்தும் அதன் அளவும் நோயாளர்களுக்குக் கிடைக்கிறதா எனச் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலை. இதனைச் சுகாதார சேவைப்பணிப்பாளர் கவனத்துக்கு எடுத்து நோயாளர்களுக்கும் உதவவேண்டுகிறேன்.

தாவடி. முத்தையா மயிலாமணி.

## நியாய விலையில் முக்கிய பொருள்கள் கிடைக்க வழி செய்க


யாழ்ப்பாணத்திற்கான ஏ9 வீதி திறக்கப்பட்டு வாகனங்கள் மூலம் பொருள்கள் வருகின்றன. ஆனால் அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி என்பனவற்றின் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை. கொழும்பில் சீனி ஏற்றும்போதே சங்கத்தில் இந்த விலைக்கு வேண்டலாம் என்று பத்திரிகையில் வந்தது. இன்றுவரை சங்கத்தில் சீனி பெறமுடியவில்லை. தனியார் கடைகளில் அரிசி, சீனி என்பன 100 ரூபாவுக்கும் மேல் விற்கின்றனர். தரமான நாட்டரிசி 120 வரை உள்ளது. சாதாரண ஏழைமக்கள் இதை நுகரமுடியாமல் உள்ளனர். அதேநேரம் எல்லோராலும் வேண்டமுடியாத பழவகைள் தாராளமாக வருகின்றன. அவற்றையும் விட முக்கியமான அரிசி, மா, சீனி என்பவற்றைத் தாராளமாகக் கொண்டு வந்து வர்த்தகர்கள் ஏழைகளுக்கு நியாய விலையில் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

எனவே தனியார் வர்த்தகர்கள் அரிசி, மா, சீனி கொண்டுவர தாராளமாக அனுமதிக்கவேண்டும். இதன் பலனை ஏழைமக்கள் அனுபவிக்கவேண்டும். எனவே இதற்கு வேண்டிய நடவடிக்கையை அரச அதிபர் அவர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் எடுக்கவேண்டும்.

ஏழைமக்கள் அத்தியாவசிய பொருள்களை மலிவு விலையில் வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் மக்கள் வழிமேல் விழிவைத்துக் காத்து இருக்கிறார்கள். ஏழைமக்கள் அத்தியாவசியப் பொருள்களை வேண்டமுடியாமல் மனம் வெதும்பிப்போய் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணம். இ.பாலமுருகன்.






இணுவில் கந்தசாமி கோயிலில் இடம்பெற்ற சப்பரத்திருவிழா, தேர்த்திருவிழா ஆகியவற்றின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

சுவாமி சப்பரத்தில் வீதியுலா வருவதை முதலாவது படத்திலும் மறுநாள் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (55)



நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற செல்லப்பா சுவாமிகளின் குருபூசை வைபவத்தில் சுவாமிகளின் திருவடிகளுக்குப் பூசை வழிபாடு, ஆராதனை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## கடவுளைக் கண்டேன்

கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? அவர் யார்? எங்கே இருக்கின்றார்? அவரின் இயல்புகள்தான் எத்தகையதோ? அவரைக் காணமுடியுமா? கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? என்று யாரேனும் கேட்டால் உலகளாவிய ரீதியில் பெரும்பாலும் ஆம் என்ற பதில் கிடைத்துவிடுகிறது. இல்லை என்று மறுத்துக் கூறுவோரும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர் யார் என்றால் உலகில் உள்ள ஜீவாத்மாக்கள் எல்லாவற்றுக்கும் தலைவனாக விளங்கும் பரமாத்மா ஆவார். அவர் எங்கே இருக்கின்றார், எப்படி இருக்கின்றார் என்றால் அவர் எங்கும் இருப்பார், எதிலும் இருப்பார். அகிலங்கள் அண்டசராசரங்கள் தோறும் ஏகனாய், அநேகனாய், இறைவனாய் இருந்துவருகின்றார்.

அவரது இயல்புகள் பற்றிக் கூறுவோமேயானால் அவர் அன்பே உருவானவர். அருளே வடிவானவர். உருவம் என்று எதனையும் கொள்ளாதவர். ஆன்மாக்கள் விரும்பும் இடங்களில் விரும்பும் வடிவங்களில் எழுந்தருளி கருணை கூர்ந்து அருள்பாலிக்கும் ஆற்றல்தனைக் கொண்டவர். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் விமலமூர்த்தியாக விளங்குபவர். பாவபுண்ணியங்களைப் பரிசீலனை செய்யும் பாங்கினைக் கொண்டு திகழ்பவர். உப்பாக நீரில் கரைந்து உருவகம் தெரியாமல் உணர்வுதன்னைக் காட்டி நிற்கும் உத்தமன். முட்டைக்குள் கோழி வைத்து கோழிக்குள் முட்டை வைக்கும் முழுநேரத் தாண்டவத்தின் முதல்வன். பூச்சியத்துக்குள்ளே ஓர் இராட்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமல் இருக்கும் பூர்வீகத்தலைவன்.

இனி அவரைக் காணமுடிகிறதா என்றால் சந்திரனைக் கண்டதும் சிவபெருமானே என்கிறோம். சூரியனைக் கண்டதும் சூரியபகவானே என்கிறோம். காற்றினைக் கண்டதும் வாயுபகவானே என்கிறோம். பூமியைத் தினமும் பூமாதேவி என்கிறோம். இவையெல்லாம் என்ன? இயற்கையே உருவான இறைவனின் அம்சங்கள் அல்லவா. ஏதாவதொரு பொருளைப் பார்த்தவுடன் நாம் அப்பொருளின் பெயரைக் கூறி விடுகிறோம். கல்லைப் பார்த்த உடன் கல் என்று கூறுகிறோம். புலியைப் பார்த்தவுடன் புலி என்று கூறுகிறோம். மரணத்துடன் போராடிக்கொண்டு அவஸ்தைப்படும் ஒரு நோயாளியைப் பார்த்தவுடன் ஆ....கடவுளே என்கிறோம். புலி என்று கூறும்போது புலியைப் பார்த்தே புலியென்று கூறினோம். பரிதவிக்கும் நோயாளியைப் பார்த்துக் கடவுளே என்னும்போது நாம் கடவுளைக் காணவில்லையா?

முருகுப்பிள்ளை செல்லத்தம்பி, வளலாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 இல் புலமைப் பரிசில் எழுதவுள்ள

# தரம் 4 மாணவர்களுக்கான

# புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை


## பகுதி 1

நேரம் : 45 நிமிடங்கள்
100 புள்ளிகள்

100

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**கீழ்வரும் வினாக்களில் பொருத்தமற்றதைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**


1.

i ii iii iv

2.

i ii iii iv

3.

i ii iii iv

4.

i ii iii iv

**கீழ்வரும் வினாக்களில் சொற்களை ஒழுங்குற அமைத்து வாக்கியமாக்குக.**

5. வேலை / நல்ல / செய்வான் / பிள்ளை / விருப்போடு.

........................................................................

6. ஆறு / ஓடியது / அடை / வழிந்து / மழையால்.

........................................................................

**கீழ்வரும் சொற்கள் வாக்கியங்களில் எந்த அமைப்பில் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது என்பதை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

7. சூரியன், குளம், ஆறு
1) வினைச்சொல் 2) அடைமொழி 3) பெயர்ச்சொல்

8. பெரிய, அழகான, மென்மையான
1) பெயர்ச்சொல் 2) பெயரெச்சம் 3) அடைமொழி

**கீழ்வரும் வினாக்களில் ஒருசொல் ஏதோ ஒருவகையில் அடுத்த வற்றிலிருந்து வேறுபடுகிறது. அச்சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

9. 1) நீலம், மஞ்சள், பச்சை, ஊதா
2) லொறி, கார், வான், பஸ்
3) மாதுளை, மாம்பழம், சாம்பர் பூசணி, அன்னாசி

10. 1) ரோசாப்பூ, வாழைப்பூ, மல்லிகைப்பூ, அந்தூரியம்பூ
2) வாவி, பொய்கை, ஆறு, கிணறு
3) சூரியன், சந்திரன், தினகரன், பகலவன்

**கீழே காட்டப்பட்டுள்ள உதாரணத்தைக் கருத்திற்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

| | வ | ந | ய | | | ந | ய | ந |
|---|---|---|---|---|---|---|---|---|
| + | ய | ந | வ | | - | வ | ந | த |
| | 4 | 4 | 4 | | | 1 | 1 | 0 |

11. நவய' எனும் சொல்லில் மறைந்துள்ள இலக்கத்தைக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக.
1) 321 2) 413 3) 314


12. 'நவ + யந' இன் கூட்டுத்தொகையாவது,
1) 35 2) 43 3) 53


13. 112' எனும் இலக்கத்தில் மறைந்துள்ள சொல்லை எழுதுக.

........................................................

14. 'ய x ன + ய' - இதன் விடையை எழுதுக. ....................................................

**கீழ்வரும் வினாக்களில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

15.

இப்படத்திலுள்ள மொத்த முக்கோணங்கள்
1) 5 2) 7 3) 9


16.

இப்படத்திலுள்ள மொத்தச் சதுரங்கள்
1) 5 2) 43 3) 53


**கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு அந்தந்த சொற்க ளுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் அந்தச் சொல்லுக்கே பொருத்தமானதன்று. அதனால் அவற்றை நன்கு அவதானித்து குறித்த வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**


அப்பா விறகு தேடுகிறார். அம்மா விறகு கொண்டுவருவார்.




அப்பா பொருள்கள் கொண்டுவருவார்.



17. 'அம்மா' எனும் சொல்லுக்குரிய குறியீடு எது?

1) 2) 3)

18. 'கொண்டுவருவார்' எனும் சொல்லுக்குரிய குறியீடு எது?

1) 2) 3)

19.  என்பதால் எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிக.
1) அம்மா பொருள் கொண்டுவருவார்.
2) அம்மா பொருள் தேடுகிறார்.
3) மாமி விறகு கொண்டுவருவார்.

20.  எனும் குறியீட்டின் மூலம் தெளிவாகும் சொல் எது?
1) அப்பா 2) பொருள் 3) கொண்டுவருவார்.

**கீழ்வரும் வினாக்களின் அமைப்பினை அவதானித்து, அடுத்து வரவேண்டிய இலக்கத்தை எழுதுக.**

21. 3245, 3254, 3524, (..........................)

22. 6573, 5736, 7365, (..........................)

**கீழ்வரும் சொற்கூட்டத்தில் இரண்டு சொற்கள் ஒத்த சொற்கள். அவற்றை இனங்கண்டு அவற்றின் கீழ் கீறிடுக.**


23. அல்லல், இன்பம், செல்வம், துன்பம், வறுமை

24. தேசம், ஆழி, நதி, கண்டம், சமுத்திரம்

25. காற்று, நைதரசன், குளோரின், வளி, நீர்

26. வானம், கடல், பொய்கை, விசும்பு, நதி

**அடைப்பினுள் தரப்பட்டுள்ள உருவங்களின் அமைப்பினை இனங்கண்டு, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**




27. மேலுள்ள உருவங்களில் அதிக சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட உருவம் எது?
1) A 2) B 3) C

28. மேலுள்ள ஊ உருவத்தைப் போன்ற இரு உருவங்களைக் கொண்டு செய்ய முடியாத உருவம் எது?
1. முக்கோணம் 2. செவ்வகம் 3. சதுரம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள இலக்கம் மற்றும் எழுத்துக்கள் அடங்கிய பெட்டியை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| A 2 T ய 3 N 6 M த 5 ல L 8 P 9 க 4 D 7 |
|---|

29. இங்குள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது? ..........................

30. மேலுள்ள ஒற்றை இலக்கங்கள் 4 இனைப் பயன்படுத்தி உருவாக்க முடியுமான பெரிய இலக்கம் எது? ..........................

31. அடைப்பினுள் உள்ள ஐந்தாவது எழுத்தைத் தெரிந்து , அதனைச் சுற்றி வட்டமிடுக.


32. இங்கு தமிழ் எழுத்துக்கள் இரண்டுக்கு மத்தியில் உள்ள இலக்கத்தின் இருமடங்கு எத்தனை?

**பிரபல்ய சிங்கள வெளியீடுகளின் மொழிபெயர்ப்புகளும் மேலதிக சேர்க்கைகளும் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உருவத்தை அவதானித்து இடைவெளி நிரப்புக.

33.




34.




- கீழேயுள்ள வினாக்களில் அடைப்பிட்டுள்ள இலக்கங்களின் பெறுமதிக்குச் சமனான பெறுமதியுடையஇலக்கத்தைக் கொண்ட அடைப்பைத் தெரிவுசெய்க.

35. [60 - 35] + 45 = 70
1) [15 + 20] 2) [50 - 25] 3) [45 - 25]

36. [50 x 2] + 25 = 125
1) [150 / 3] 2) [25 x 3] 3) [45 + 55]

- கீழ்வருவனவற்றில் கீறிட்டுள்ள பகுதிக்கு காரணமாக அடுத்த பகுதி அமைந்திருந்தால் (✓) என்றும் பிழையாயின் (✗) என்றும் அடைப்பினுள் குறிப்பிடுக.

37. பீங்கான் கீழே விழுந்ததால் உடைந்து விட்டது. [ ]
38. தம்பி குற்றம் செய்யாததால தண்டிக்கப்பட்டான். [ ]
39. சந்திரன் மறைந்து செல்ல இருள் ஏற்பட்டது. [ ]
40. நிமல் வினாப்பத்திரத்துக்கு சரியாக விடையெழுதி சிறந்த சித்திபெற்றான். [ ]

**நன்றி: ஸத்தர, லக்விந்து, ஜகத்தா, மிஹிர, ஷிஷ்யத்வ.**

இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 03 இன் பகுதி 11 உம்.அடுத்தவாரம் வெளிவரும்......

## முன்னோடிப் பரீட்சை 2 - i,ii வினாத்தாள்களுக்கான விடைக் குறிப்புக்கள்

### பகுதி i

1. 1) 2. 3) 3. 4. 3) 5. 2) 6. 3) 7. 2) 8. 2) 9. 2) 10. 2) 11. 2) 12. 2) 13. 1) 14. 1) 15. 3) 16. 3) 17. 3) 18. 2) 19. குணப்பெயர் 20. வினைச்சொல் 21. ஒத்தசொல் 22. அடுக்கிடுக்குத்தொடர். 23. 1) 24. 3) 25. 2) 26. 2) 27. 3) 28. 2) 29. 3) 30. 1) 31. 2) 32. 1) 33. 2) 34. 2) 35. 2) 36. 3) 37. ஆட்சி 38. புள், பட்சி 39. தச்சன் 40. Face

### பகுதி ii

1. 1) சுத்தத்தைப் பற்றி. 2) தூய காற்று, தூய நீர், தூய உணவு, தூய சூழல். 3) நுண்ணிய அங்கிகள் 4) சுத்தம் சுகம் தரும். 5) 1) வளி 2) பூணுதல் 6) 1) அவசியமாகின்றன 2) பரப்பும் 7) உலர்ந்த ஆடை 8) சால 9) எதிர்காலம் 10) அங்கிகள் 2. 1) அம்மா விறகு உடைப்பதற்கு காட்டுக்குப் போனார். 2) சேவகி பிள்ளையை(ப்) பாதுகாத்து வந்தாள். 3) ஆசிரியர் திறமையான சிறுவர்களுக்கு(ப்) பரிசுப்பொருள்கள் கொடுத்தார். 3. 1) Parrot 2) Crab 3) Bread 4) Chair 4. 1) உங்கள் ஊர் எது? 2) எனது ஊர் வத்த(ை)ள. 5. 4) 6. 4) 7. 4) 8. 4) 9. 4) 10. 2) 11. அ) விவசாய நடவடிக்கைகளுக்கு (வேலைகளுக்கு) உதவுதல், நிலத்தில் பல்வேறு பொருள்கள் உக்குவதற்கு உதவுதல், உணவு மற்றும் பானம் பெற்றுத் தருதல். ஆ) ஆடு, மாடு 12. கரப்பான் பூச்சி, மழைக்குருவி, மரங்கொத்தி, நத்தை, தீக்கோழி. 13. கிளி, மைனா, தேன்சிட்டு, வாத்து, கொக்கு 14. நாமலர், சூரியகாந்தி, அந்தூரியம், நீலோற்பலம், கார்த்திகை 15. 1) 675 2) அறபா 3) 70 4) 225, 250, 430, 550 16. XX , XXV , Xiii, XL 17. 1) மூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்து ஒன்பது 2) ஈராயிரத்து (இரண்டாயிரத்து) தொள்ளாயிரத்து எழுபத்தேழு. 18. 1) 24 2) 80 3) 60 19. 1) 105 2) 800 3) 660

20. 1) மரங்கள் இயற்கை அன்னையின் அபூர்வ படைப்பினமாகும்.
2) மரங்கள் சுற்றுச் சூழலிலுள்ள வளியை சுத்தப்படுத்தும்.
3) மரங்கள் சூழலை குளிர்ச்சியாக வைத்திப்பதோடு நீர்வீழ்ச்சிகளையும் பாதுகாக்கும்.
4) மரங்கள் நமக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களைத் தருகின்றன.
5) அத்தோடு மரங்களால் சூழல் அழகு பெறுகின்றது.
6) எங்களுக்கு பல்வேறு விதத்திலும் உதவும் மரங்களை நாங்கள் பாதுகாப்போம்!

*தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -*
**இஸ்மாயில் எம். பைரூஸ்**
(கொழும்பு)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035



சமாதானத்திற்கும் நல்லினக்கத் துக்குமான பணியகம் மாதாந்தம் பாடசாலை சிறார்களுக்கு பொது அறிவுப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்து வருகிறது. அந்தவகையில் வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சமாதானக் கல்வியின்போது எடுக்கப்பட்ட படம் இது. (160)





வட்டு இந்து நவோதயாக் கல்லூரியில் நடைபெற்ற சித்திரக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள்.

சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், சித்திர ஆக்கங்களை உருவாக்கிய மாணவர்களுடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் நிற்பதையும் படங்களில் காணலாம். (29)



வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்திய வட்டுக்கோட்டைக் குடும்ப முன்பள்ளிகளின் விளையாட்டு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

சிறார்களுடன் குடும்ப முன்பள்ளிச் செயலாளர் செ.துனிஸ்டாங்கினி, வட்டு தெற்கு கிராம உத்தியோகத்தர், காத்திகேய வித்தியாலய அதிபர், சமாதான நீதிவான் [illegible] முன்பள்ளி ஆசிரியர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



வலிகாமம் வலயப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைப் பேரவைச் சட்டம் அமுலானால் ஊடகவிலாளர்களைச் சிறைக்குள் தள்ளும்

## எட்டு ஊடக அமைப்புகள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 26

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் சட்டத்தை மீண்டும் கொண்டுவரும் செயற்பாடானது, ஊடகவியலாளர்களை சிறைக்குள்தள்ளும் அதிகாரத்தை வழங்குவதாக அமைகின்றது என இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம் உட்பட 8 ஊடக அமைப்புகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

1973 பத்திரிகைப் பேரவைச்சட்ட இலக்கம் 5 மீண்டும் செயற்பாட்டிற்கு வரவுள்ளது என அறிய வந்துள்ளது. இதனால், ஊடக அமைப்புகள் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைந்துள்ளன.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் தண்டம் அறவிடும் மற்றும் பத்திரிகையாளர்கள், பிரசுரிப்பாளர்களுக்கு சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரங்கள் உள்ளன.

பத்திரிகையாளர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் மற்றும் அவர்கள் மீது தண்டப் பணம் அறவிடுதல் அல்லது அவர்களை சிறைக்கு அனுப்புதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையாக ஊடக கலாசாரம் அமைய முடியாது.

அதற்குப் பதிலான நவீன உலகமானது சுய ஒழுங்கமைப்பு பொறிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் சட்டமானது சர்ச்சைக்குரிய வரலாற்றைக் கொண்டுள்ளது. இச்சட்டமானது பத்திரிகையாளர்களையும், பிரசுரிப்பாளர்களையும் சிறைக்கு அனுப்பும் வகையில் உள்ளது.

இலங்கைப் பத்திரிகை பேரவை சட்டமானது சர்ச்சைக்குரிய வரலாற்றை கொண்டுள்ளது. ஊடக சுதந்திரம் தொடர்பாக 'பீதியூட்டும் விளைவை' கொண்டிருந்ததாக கருதப்பட்டது. இச்சட்டமானது பத்திரிகையாளர்களையும், பிரசுரிப்பாளர்களையும் சிறைக்கு அனுப்பக்கூடிய அதிகாரத்தை உள்ளடக்கி இருந்தது. 1994 ஒக்டோபர் 13 இன் அமைச்சரவைப் பத்திரம் இல. 94.11.2009 இல் சுய ஒழுங்கமைப்பு பொறிமுறையை ஏற்படுத்த தாங்கள் இணக்கம் தெரிவித்திருந்தீர்கள். உயர் பத்திரிகைப் பேரவையின் இடத்திற்கு இதனை ஸ்தாபிக்க பேரவையானது பத்திரிகையாளர் மீது குற்றத் தண்டனையை அமுல்படுத்த முடியும் என்றும் இது காலாவதியான தொன்றென்றும் அச்சு ஊடகங்களை அதி களவிற்கு ஜனநாயக ரீதியில் ஒழுங்கமைப்பதற்கு சுய ஒழுங் கமைப்பானது மேலானது என்றும் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்ததாக நாங்கள்புரிந்துகொண்டிருந்தோம்.

தாங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சுதந்திரமானதும், பொறுப்புவாய்ந்ததுமான பத்திரிகைகள் குறித்து பேசி இருந்தீர்கள். (கன்சார்ட் 2002 ஜூன் 18, பந்தி 888) குற்ற அவதூறு தொடர்பான சட்டங்கள் அகற்றுவதற்கான சட்டத்திருத்தம்கொண்டு வரப்பட்டபோது தாங்கள் உரையாற்றியிருந்தீர்கள். இந்த திருத்தமானது நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதை தாங்கள் அறிவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. 2003 இல் இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட் டத் திருத்தம் நடைமுறைக்கு வந்தது.

குற்ற அவதூறு தொடர்பான சட்டங்களை அகற்றிவிட்டு, சுய ஒழுங்கமைப்பு பொறிமுறையை ஏற்படுத்துதல் குறித்து ஊடக சங்கங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரச கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் தொடர்ச்சியான கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குற்ற அவதூறு தொடர்பான சட்டமானது அந்தத் தருணத்தில் ஊடகவியலாளர் மீது அரசின் அடக்குமுறையை பிரயோகிக்கும் கருவியாக பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அதனை அகற்றி சுய ஒழுங்கமைப்பு பொறிமுறையை ஏற்படுத்துவது குறித்து கலந்தாராயப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக ஊடக அமைப்புகள் ஒன்றுபட்டு செய்திப் பத்திரிகை தொழிற்துறையுடன் இணைந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை ஸ்தாபித்தனர். 6 வருடங்களுக்கு முன்னர் இணக்கச் சட்டம் இலக்கம் 11, 1996 இன் ஏற்பாட்டின்கீழ் இந்தப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. பத்திரிகைப் பேரவை போலல்லாது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவானது அரசிற்கோ அல்லது முறைப்பாட்டாளருக்கோ நிதி சுமையை ஏற்படுத்துவதாக இருக்கவில்லை.

இந்தச் சூழ்நிலைகளின் கீழ் சுய ஒழுங்கிணைப்பு பொறிமுறைக்கு ஆதரவளிக்கும தனது முன்னைய ஈடுபாட்டை அரசு வெற்றிடமாக்கி வருவதையிட்டு ஊடக அமைப்பினர் கவலை அடைந்துள்ளனர்.

யாவற்றிற்கும் மேலாக கீழே குறிப்பிட்டிருக்கும் ஊடக அமைப்புகளுடன் அரசானது எந்தவொரு பேச்சை மேற்கொள்வதானது பயனுள்ளது என்றோ கவனமாக கையாளவேண்டிய நடவடிக்கை என்றோ பரிசீலனைக்கு எடுக்காதமையை இட்டு நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த ஊடக அமைப்புகள் பெரும்பான்மையான வெளியீட்டாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், உழைக்கும் பத்திரிகையாளர்கள், ஊடக தொழிற்சங்கங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.


இது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்க அதிகளவிற்கு ஆதரவை வழங்குகின்றது. எவ்வாறாயினும், சுய ஒழுங்கமைப்பு முறைமை தொடர்பான விடயத்தில் ஏதாவது பிரச்சினை இருக்குமானால் அவை தொடர்பாக ஆரயாப்பட்டு உட னடியாகத் தீர்வு காணப்படவேண்டும். சுய ஒழுங்கமைப்பு முறைமையை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அரசானது இலங்கைப் பத்திரிகைச் சட்டம் இலக்கம் 5, 1973 ஐ மீண்டும் செயற்படுத்த விரும்புகின்றது. இது இலங்கையின் பத்திரிகைச் சுதந்திரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் உண்மையில் அசௌகரியமான நிலைமையையே ஏற்படுத்தும்.

இந்தத் தீர்மானம் குறித்து மீள்பரிசோதனை செய்யுமாறு ஊடக அமைப்புகளான நாங்கள் அரசை வலியுறுத்துகின்றோம். எம்முடன் பேச்சை மேற்கொள்ளுமாறும் கோருகின்றோம். ஊடக கலாசாரத்தின் ஓர் அங்கமான சுய ஒழுங்கமைப்பை மேம்படுத்துவதற்கு நாங்கள் சம்பந்தப்பட்டவர்கள். ஜனநாயகத்தின் மீதான ஆர்வம், பொறுப்பு மற்றும் இலங்கையின் சுதந்திரமான ஊடகத்தை மேம்படுத்த எம்முடன் பேச்சு மேற்கொள்ளவேண்டும் என அரசை வலியுறுத்துகின்றோம். இந்த விடயத்தின் முக்கியத்துவம் கருதி இக்கடிதத்தை நாங்கள் ஊடகங்களுக்கு வெளியிடுகிறோம் என்று இந்த எட்டு அமைப்புகளும் ஜனாதிபதிக்க எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன. இக்கடிதத்தின் பிரதிகள் வெகு சன ஊடகத் தகவல் துறை அமைச்சருக்கும் ஊடக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை முஸ்லிம் மீடியா போரம் ஊடகப் பணியாளர்கள் தொழிற்சங்கங்களின் சம்மேளனம், தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் (இலங்கைப் பிரிவு), சுதந்திர ஊடக இயக்கம், இலங்கைச் செய்திப் பத்திரிகைச் சங்கம், இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அமைப்பு ஆகியவையே ஜனாதிபதிக்கு இக்கடிதத்தை அனுப்பிவைத்துள்ளன.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 07 ★ 1922



மறைவு 26 ★ 06 ★ 2006

### அமரர் வேலன் இராமசாமி

*திதி: சதுர்த்தி*

பாசத்தின் பொக்கிசமாய் பண்பின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் சமூகத்தின் வழிகாட்டியாய்
திகழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள்
மண்ணை விட்டு விண்ணுலகத்தை தொட்டு
மூன்றாண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(86495)

*105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

என்றும் நினைவுடன்: **குடும்பத்தினர்.**



## பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

### நா.சிவநேசன்

B.A., Dip in Edu, M.Ed.,


யா/புதுமடம் றோ.க.த.க.பாடசாலையில் 01.12.1998 இல் இருந்து 08.07.2005 வரை அதிபராகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ள திரு.நா.சிவநேசன் அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்று பல்லாண்டு வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(சி/559170)

பாடசாலைச் சமூகம், யா/புதுமடம் றோ.க.த.க.பாடசாலை.



## யா/புதுமடம் றோ.க.த.க.பாடசாலை சேவை நலன் பாராட்டு



### திரு.க.தணிகாசலம்

இ.ஆ.சே.வகுப்பு - 1 (அதிபர்)

சேவை விபரம்

நு/ஒஸ்போண் த.க.பாடசாலை 01.11.71 - 31.12.77 வரை
யா/கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.01.78 - 31.12.79 வரை
நு/ஒஸ்போண் த.க.பாடசாலை 01.01.80 - 11.03.81 வரை
நு/கணபதி வித்தியாலயம் 12.03.81 - 14.06.83 வரை
மு/கருனாட்டுக்கேணி அ.த.க.பாடசாலை 15.06.83 - 28.02.84 வரை
மு/வெள்ளாமுள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலை 01.03.84 - 31.08.84 வரை
மு/வித்தியானந்தாக் கல்லூரி 01.09.84 - 31.04.86 வரை
யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை 01.05.86 - 26.05.88 வரை
யா/கந்தரோடை த.க.வித்தியாசாலை 27.05.88 - 31.09.96 வரை
யா/இணுவில் இ.கல்லூரி 01.10.96 - 23.02.2005 வரை
யா/புதுமடம் றோ.க.த.க.பாடசாலை 24.02.2005 - 26.06.2009 வரை

26.06.2009 இல் ஓய்வுநிலை பெறுகின்ற திரு.க.தணிகாசலம் அவர்களை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(சி/559169)

பாடசாலைச் சமூகம்.



## 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன் **சொருபன் சுருதியன்**

அன்னை மடியில் 13★03★2005

ஆண்டவன் அணைப்பில் 13★05★2009

செல்வன் **குகதாஸ் விவேகன்**

அன்னை மடியில் 16★06★2004

ஆண்டவன் அணைப்பில் 13★05★2009



மேகப் பெருவெளியில் மின்னலென ஒளிர்பவனே
தோகை மயிற்குஞ்சாகி குலநடை பயின்றவனே
பாகைக் கசப்பாக்கும் பால்மொழியை மொழிந்தவனே
ஆலிக்குள் ஆலியென அவதரித்த செல்வங்களே
சோகத்து வாழ்விலே சொக்குமின்பம் தந்தவனே
சாகத் துணிந்து சருதியிலே எங்கு சென்றீர்கள்.

உங்கள் நினைவுடன்:

*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.* (86515)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக இதழியல், உடற்கல்வி டிப்ளோமா கற்கைக்குத் தெரிவாகியுள்ள மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்.பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறி, உடற்கல்வி டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறி ஆகியவற்றுக்குத் தெரிவான மாணவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

### இதழியல் டிப்ளோமா

உருத்திரகுமாரன் அபிராமி, அருமைத்துரை யசீகரன், தியாகராச சர்மா மயூரகிரி, ஜெகன்மோகன் புவனேந்திர தர்ஷினி, பொன்னம்பலம் நிவேதிகா, விக்னேஸ்வரன் பகவதி, ஆனந்தம் யசோதன், வேலுப்பிள்ளை சிவநேசன், ஸ்ரீராமச்சந்திரன் மயூதரன், லக்சுமிகாந்தன் சண்முகராஜா, விக்னேஸ்வரன் கஜீபன், சற்குணராஜா சுபானுகா.

சந்திரன் சதீஸ்குமார், ஜெகநாதன் நிவர்சன், நடராஜா நிசாந்தன், சங்கரன் வினோதா, ஜெகநாதன் அபிராமி, கந்தசாமி அனோயன், பரமானந்தன் சிந்துஜன், சுவாம்பிள்ளை ஜெயசீலன், பொன்ராசா சோபிகா சிம்லினி, மகாலிங்கசிவம் மயூரன், தேவபாலன் சபேசன், பாலசிங்கம் மேகலாதன், ஜெனரதன் சோதி.

தணிகாசலமூர்த்தி ஜெனன், பேரின்பநாயகம் வனஜா, புஸ்பநாதன் செந்தீபன், சிவஞானம் ராகுலன், வன்னியசிங்கம் சிவசுதன், சிவசுப்பிரமணியம் மதுசீலன், யோகேஸ்வரன் ஜனனி, ஈஸ்வரதாசன் கார்த்திகா, யோகநாதன் வித்தியா, தயாபரன் தனுஷ், வேதநாயகம் நிசாந்தி, அனந்தராசா அருட்செல்வி.

கடாட்சம் கபிதாரகா, பரமானந்தன் சிவகணேசன், வரதராசா கங்கா, ஜீவதாஸ் தர்சன், பாலகிருஷ்ணன் தயானந்தன், முருகேசு கீதாஞ்சலி, பூபாலசிங்கம் பராசக்தி, செல்வரட்ணம் ரோமியா, அனந்தராஜா மோகனறுக்னி, ஜெகநாதன் அச்சுதன், ஜெயச்சந்திரன் சுகனிஜா, விக்னேஸ்வரன் விமலச்சந்திரா, செல்வசோதி ஜெறோம் நிசாந்தன்.

### உடற்கல்வி டிப்ளோமா

இளமோகன் வினோஜா, சிவஞானம் ஜலினி, ஜெயநாதன் டிலன், சிவகுமாரன் கலாதேவி, கருணைவேல் விஷ்வேதிகா, பசுபதி மதனராஜ், மஜீபன் சந்திரவதனா, சந்திரசேகரம் சந்திரமோகன், அருணகிரிநாதன் ஜெனரதனா, மகாலிங்கம் சலுஜா, கலைஞானரட்ணம் கலைச்செல்வன்.

தேவராசா நிருசாந்தி, இமானுவேல் யூட்கமிலஸ், குமாரசாமி அரவிந்தன், மகாலிங்கம் சந்திரகுமார், ராஜேந்திரம் விஜிதரன், செல்வரட்ணம் ரம்மிய ராகுலன், லோகேஸ்வரன் சுவேன்ரிசா, வரதராசன் மனோராஜ், செல்லையா தர்சிகா, காசிநாதர் பிரசாந்தி, திருலோகநாதன் தேவாநந், தெய்வேந்திரம் இந்திரகுமார்.

யேசுதாசன் அன்ரன் பிறின்ஸ், தெய்வநாதன் இந்துகாணி, மயிலகன் லாவண்யா, சிவமகராசா ஜெயந்தினி, சுப்பிரமணியம் பிரதீபன், சிவகுமாரன் கிருஷாந்தினி, தேவராஜா பிரபு, கனகரட்ணம் நித்தியநாதன், கோபால் பொபிநாதன், சிவபாதம் சிவச்செல்வன், அமலோப்பவநாயகம் ஜெனட்நிலானி, ஆனந்தம் யசோதன்.

குலநந்தவடிவேல் அகிலதீபன், சோமநாதன் தேவநாதன், செல்வராசா சன்சயன், கனகலிங்கம் சுகந்தன், கெங்காதரன் பகீரதன், இராஜேஸ்வரன் ராகுலன், சோமஸ்கந்தராசா கரிதரன், கனகலிங்கம் திலீபன், வெற்றிவேல் பிரதீபன், டோமினிக் பரிடா, விஜயபாலன் பாலகிருஷ்ணன், காராளசிங்கம் பிரணவன், சிவநேசராசா தனுஷ்குமார், டேவிற் அடில் நிலந்தன், பிறேமஜெகன் அகல்யா.

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த திணைக்களங்களில் சிரமதானம்

குருநகர், ஜூன்26

டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதனால் ஆஸ்பத்திரிகள் மற்றும் அது சார்ந்த திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது அரச நிறுவனங்களில் நுளம்பு பரவாமல் செய்யும் நோக்குடன் வாரத்தில் ஒருநாள் துப்புரவுப் பணியை மேற்கொள்ள வேண்டும் என சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு சகல சுகாதார நிறுவனங்களையும் கோரியுள்ளது.

இச் சிரமதானம் மூலம் டெங்குநோய் பரவாமல் தடுக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(203-51)

# பிரபாகரனை ஐ.தே.கட்சி ஒருபோதும் மறவாதாம்

கொழும்பு, ஜூன்26

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கவிருந்த வாக்குகளை இல்லாமல் செய்த புலிகளின் தலைவர் பிரபாகரனை ஐக்கிய தேசிய கட்சி ஒருபோதும் மறக்காது என்று அக்கட்சியின் எம்.பி. காமினி ஜயவிக்ரம பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை திருத்தச் சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க எமது இரண்டு வருட ஆட்சியைக் கலைத்தார். அதனால்தான் நாடு நாசமாகத் தொடங்கியது.

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது புலிகளின் தலைவர் பிரபாகரன் எமது கட்சிக்கு வாக்களிக்கவிடாமல் மக்களைத் தடுத்தார். இதனால் நாம் அவரைச் சபித்தோம். அவர் எமது பரம எதிரியானார். இப்போது அவர் கொல்லப்பட்டுவிட்டார். இருந்தாலும் நாம் ஒருபோதும் பிரபாகரனை மறக்கமாட்டோம்.

இந்த நாட்டில் இப்போது யுத்தம் முற்றாக முடிந்துவிட்டது. இன, மத, கட்சி வேறுபாடுகளைக் கடந்து இந்த நட்டை அரசு அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இந்த அட்சியாளர்களுக்கு வெள்ளைக்காரர்களைப் பிடிக்காது. ஆனால், இந்த நாட்டுக்கு ஏற்பட்ட தீமைகளை விட நன்மை தான் அதிகம். இதை நாம் மறந்து விடக்கூடாது.

கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் என அரசு திட்டங்களை மேற்கொண்டுள்ள போதிலும் பிற்பொகட் வசந்தம்தான் இடம் பெறுகிறது இதனால் கவலைக்குரிய வசந்தங்களையே நாம் காணவேண்டி வரும்.

அபிவிருத்திப் பணிகளில் அமைச்சர்கள் திருடும் போது ஒப்பந்தக்காரர்களும் திருடவே செய்கின்றனர். இந்த நிலைமையை தடுத்தால் நாம் வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையேற்படாது- என்றார். (சி)

# 'தந்தை செல்வாவும் பிரபாகரனும் தோற்றுப் போன தலைவர்கள்' என்று தாம் கூறவில்லை என்கிறார் சிவநாதன் கிஷோர்

கொழும்பு, ஜூன் 26

''தந்தை செல்வாவும் பிரபாகரனும் 'தோற்றுப் போன தலைவர்கள்'! - இப்படி வர்ணிக்கின்றார் கிஷோர் எம்.பி.'' என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை (19.06.2009) அன்று'உதயனில்' வெளியான செய்தி குறித்து மறுப்புத் தெரிவிக்கின்றார் வன்னி மாவட்ட தமிழரசுக்கட்சி எம்.பியான சிவநாதன் கிஷோர்.

'ஏசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் அவர் வழங்கிய பேட்டி எனத் தெரிவித்துப் பிரசுரித்த விடயங்களே 'உதயனில்'யில் தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு - மேற்படி இணையத்தளத்தை மேற்கோள் காட்டி- பிரசுரிக்கப்பட்டிருந்தன.

எனினும், தாம் கூறாத விடயங்களைத் தாம் கூறியனவாக அந்த இணையத்தளம் பிரசுரித்திருப்பதாக இப்போது கிஷோர் குற்றம் சுமத்துகின்றார்.

''தந்தை செல்வாவும் பின்னர் தலைவர் பிரபாகரனும்'' நடத்திய போராட்டங்கள் வெற்றி இலக்கை அடையவில்லை என நான் குறிப்பிட்டமை உண்மைதான்.

''ஆனால், பிரபாகரனை உயிருடன் வைத்திருப்பதற்காக இருபதாயிரம் தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தார்கள் என்றோ, இருபத்தியையாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்து, ஒரு லட்சம் தமிழ் பேசும் மக்களை வடபகுதியில் இருந்து விரட்டியவர் பிரபாகரன் என்றோ, வன்னியிலிருந்து பத்தாயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்களை அவர் துரத்தினார் என்றோ நான் குறிப்பிடவேயில்லை.

''இப்படி நான் குறிப்பிடாத விடயங்களை மேற்படி இணையத்தளம் வெளியிட்டமையாலும், அதை 'உதயன்' மீளப் பிரசுரம் செய்தமையாலும் பெரும் மன உழைச்சலுக்கும் அசௌகரியத்துக்கும் நான் உள்ளாகியுள்ளேன். எனவே எனது மறுப்பை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.'' - இப்படி கிஷோர் எம்.பி. மேலும் தெரிவித்திருக்கின்றார்.

தலைவர் பிரபாகரனையோ, தந்தை செல்வாவையோ நான் கொச்சைப்படுத்தவில்லை; கொச்சைப்படுத்தப் போவதுமில்லை.'' - என்றும் அவர் குறிப்பிட்டார்.

(சி)

# நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குறியாகவே உள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

கொழும்பு, ஜூன்26

''பயங்கரவாதத்தின் முடிவானது ஜனநாயகத்தின் வெற்றியாகும். ஆனால், இலங்கையில் அந்நிலையைக் காண முடியவில்லை. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் ஜனநாயகம் கேள்விக்குறியாகவே தென்படுகின்றது.''

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, நகரமண்டபத்தில் 'சுதந்திரத்திற்கான அரங்கம்' என்னும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊடக சுதந்திரம் இந்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. யுத்தம் முடிவடைந்து காணப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலும் ஊடகங்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்கள் ஒன்றிணைவதன் மூலமே அவ்வர்கள் தங்களுக்கான உரிமையைப் பெற முடியும். அதற்கான காலம் தற்போது கனிந்துள்ளது.

சமாதானப் பேச்சுக் காலங்களின்போது விடுதலைப் புலிகளின் தயா மாஸ்டருடன் பல ஊடகவியலாளர்கள் தொடர்புகொண்டு செய்தி சேகரித்தனர். ஆனால், அரசு தற்போது புலிகளுக்கு உதவிய ஊடகவியலாளர்களின் பெயர் பட்டியலை வெளியிடப் போவதாகப் புதுவித அச்சுறுத்தலை விடுத்துள்ளது.

பத்திரிகைப் பேரவை சட்டத்தை மீள அமுலாக்க முயல்வது ஊடகவியலாளர்களின் நிலையைக் கேள்விக்குரியதாக்குகின்றது. சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதன் மூலம் ஊடகங்களைப் பாதுகாக்க முடியும்.

அரசு வடக்கில் தேர்தலை அறிவித்திருக்கின்ற நிலையில் மதவாச்சிக்குச் செல்வதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. இந்நிலையில் சுதந்திரத் தேர்தல் பிரசாரம் மேற்கொள்வது எவ்வாறு?

இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ள மக்களின் நிலையை அறிய எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இந்நிலை ஏன்? இதனை மாற்றவேண்டும் -' என்றார் அவர்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களை மனோகணேசன், மங்கள சமரவீர சிறிதுங் ஜெயசூரியா, நிமங்கா பெர்னாண்டோ மற்றும் கொள்கைகளுக்கான நிலையத்தின் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## சைவசமய பாட செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன்26

வலிகாம கல்விவலய பாடசாலைகளின் தரம் 9 மாணவர்களுக்கு சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(9)






தேசிய உணவு வாரத்தை முன்னிட்டு 'நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் அண்மையில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட படங்கள்.

இதில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.பற்றிக் [illegible] ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.


(படங்கள்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## மகேந்திரன் சசீந்திரன் (சசி)

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி A/L 2003)



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் சசீந்திரன் (சசி) 22.06.2009 திங்கட்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் மகேந்திரன் (உரிமையாளர்- சாருஜன் பென்சி ஹவுஸ்) புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கஜேந்திரன் (கஜன்- பிரான்ஸ்), விஜேந்திரன் (விஜன்- கொழும்பு), நிலாந்தி (நிலா), சாருஜன் (மாணவன்- சென். ஜோன்ஸ் கல்லூரி, 2009 கணிதப்பிரிவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகிழ்பரா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, கே.கே.எஸ்.றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(86603)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

## மகேந்திரன் சசீந்திரன் (சசி)



அலை கடலைத் தாண்டியே இவ்வூர் நானும்- குடும்பமும்
தலை நிமிர்ந்து நிற்கவென ஓடி வந்தோம்!- வைரச்
சிலையெனவே என்னருமைச் சகோதரனே!- என்னை
சிரித்தமுக அழகுடனே அனுப்பி வைத்தாய்
நிலை குலைந்து போகும் வண்ணம் செய்தி கேட்டேன்
நடுநடுங்கிப் போச்சுதடா எந்தன் நெஞ்சம்
கலையழகே கொடுமதியின் குரூரத்திலே
குவலயத்தில் உன் வாழ்வும் பறிபோச்சுதே
விலை கொடுத்து வாங்கிடவா முடியும் உன் உயிரை
வாழ்நாளில் உன்பிரிவைத் தாங்கவும் முடியுமோ?

தகவல்:
பாசமுள்ள அண்ணா
கஜன்.
பிரான்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தை தனித்து ஆட்சி செய்யும் தகுதி காங்கிரஸுக்கு உண்டு என்கிறார் தங்கபாலு

சென்னை, ஜூன் 26



தமிழகத்தை தனித்து ஆட்சி செய்யும் தகுதி காங்கிரஸ் கட்சிக்கு உள்ளது. தனித்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதுதான் தொண்டர்களின் விருப்பம். எங்களுடைய லட்சியமும் அதுதான். இந்த இலக்கை நோக்கித்தான் இனி எங்களின் பயணம் தொடரும் - என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு கூறியுள்ளார்.

மேலும், கச்சதீவு சர்வதேசப் பிரச்சினை என்பதால் மத்திய அரசு எடுக்கும் நிலைதான் தமிழக காங்கிரஸின் நிலையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை தங்கபாலு தொடங்கி வைத்தார்.

இதையடுத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் இன்று (அதாவது நேற்று) தொடங்கப்பட்டுள்ளது. ஒரு உறுப்பினர் 25 உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். 3 மாதத்தில் 50 லட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

புதிய உறுப்பினர் சேர்க்கை முடிந்தவுடன் சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக உட்கட்சித் தேர்தல் நடைபெறும். உட்கட்சி தேர்தலுக்கான அட்டவணையை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அறிவிக்கும். இந்த உட்கட்சித் தேர்தலில் இளைஞர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இளைஞர்கள் அதிக அளவில் ஈர்க்கப்படுவார்கள். உட்கட்சித் தேர்தலில் அனைத்துத் தலைவர்களும் ஓரணியில் நின்று 1996இல் எப்படி தேர்தல் நடத்தினோமோ அதன் அடிப்படையில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்படும். ராகுல் காந்தி தனக்கு வந்த பதவியை உதறி விட்டு கட்சியை பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கச்சதீவு சர்வதேச பிரச்சினை என்பதால் மத்திய அரசு எடுக்கும் நிலைதான் தமிழக காங்கிரஸின் நிலையாகும். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஏற்கனவே ஆட்சி செய்துள்ளது. எங்களுக்கு ஆட்சி செய்யும் தகுதியுள்ளது. தனித்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதுதான் தொண்டர்களின் விருப்பம். எங்களுடைய லட்சியமும் அதுதான். இந்த இலக்கை நோக்கித்தான் இனி எங்களின் பயணம் தொடரும் - என்றார்.



கவியரசு கண்ணதாசனின் 83ஆவது பிறந்த நாளையொட்டி தியாகராஜ நகரிலுள்ள அவரது சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த படத்துக்கு மின்சாரத்துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி, செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தபோது.......

# சபையில் 'வணங்காமண்' விவகாரம் குறித்து தி.மு.க. - அ.தி.மு.கவிடையே கடும் மோதல்

சென்னை, ஜூன் 26

சட்டசபையில் நேற்று வணங்காமண் கப்பல் தொடர்பாக அமைச்சர் துரைமுருகனுக்கும், அ.தி.மு.க. உறுப்பினர் பி.கே.சேகர்பாபுவுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. அமைச்சர் துரைமுருகன் ஆவேசமாக பயன்படுத்திய வார்த்தைகள் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன.

ஐரோப்பா வாழ் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட வணங்காமண் கப்பலை இலங்கை அரசு திருப்பி அனுப்பி விட்டது. இந்தக் கப்பல் சென்னை அருகே நங்கூரம் பாய்ச்சியுள்ளது. இதுபற்றிய சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நேற்று சட்டசபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் அ.தி.மு.க. சார்பில் பி.கே.சேகர் பாபு பேசினார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனிதச்சங்கிலி, உண்ணாவிரதம் போன்ற நாடகங்கள் போல, இப்போது இந்த கப்பலை திருப்பி அனுப்பும் செயலும் நாடகமாகிவிடக்கூடாது என்று கூறினார்.

உடனே துரைமுருகன் எழுந்து, சேகர்பாபுவைப் பார்த்து ஆவேசமாகப் பேசினார். அவருக்குப் பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் கூறிய ஒரு வார்த்தைக்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் கடும் ஆட்சேபனை தெரிவித்தார்கள். அவர்களுக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்குரல் கொடுக்க சட்டசபையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. சிறிது அமளியும் நிலவியது.

பின்னர் சேகர்பாபு தொடர்ந்து பேசுகையில் -

தமக்கெதிராக அமைச்சர் பயன்படுத்திய அதே வார்த்தையை அமைச்சருக்கு எதிராக பயன்படுத்தியபோது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அவையில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது.

மீண்டும் அமைச்சர் துரைமுருகன் எழுந்து ஆவேசமாகப் பேசினார். சேகர்பாபு மீது ஒருமையில் அடுக்கடுக்காக பல வார்த்தைகளை உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறினார். அ.தி.மு.க. உறுப்பினர்கள் இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தார்கள்.

உடனே முதல்வர் கருணாநிதி தலையிட்டு அவையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தினார். இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவது பற்றிய விவாதம் திசைமாறி போகிறது என்று அவர் கூறினார்.

இதில் ஒருமித்த கருத்து ஏற்பட வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு உதவிப்பொருட்கள் சேர வேண்டும். எனவே அமைச்சரும், உறுப்பினரும் ஒருவரைப்பார்த்து ஒருவர் கூறிய வார்த்தைகள் அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று முதல்வர் யோசனை தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து அமைச்சர் துரைமுருகனும், சேகர்பாபுவும் கூறிய வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன.




# கட்சித் தலைவர் பதவியை மீண்டும் பொறுப்பேற்க விருப்பமில்லை

## அத்வானி தெரிவிப்பு

மடிகேரி, ஜூன் 26



கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்க விருப்பமில்லை - என்று பா.ஜ.க. மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் விராஜ்பேட்டையில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிய பேட்டியிலேயே அவர் இதைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

மக்களவைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை பா.ஜ.க. ஏற்கிறது. பா.ஜ.கவை மக்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்த்தியுள்ளனர். மக்கள் அளித்துள்ள இந்தப் பொறுப்பை சிறப்புடன் செய்வோம். திறமையான எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம்.

தேர்தலில் பா.ஜ.கவுக்கு மக்கள் மோசமான தோல்வியைக் கொடுத்துவிடவில்லை. பா.ஜ.க. மீதும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதை இது வெளிப்படுத்துகிறது.

மீண்டும் கட்சித் தலைவர் பதவியை ஏற்க விருப்பமில்லை. தலைவர் பதவிக்கு கட்சியில் ஏராளமான புதிய தலைவர்கள் உள்ளனர். எனவே நான் எதிர்க்கட்சித் தலைவராகவே நீடிப்பேன் - என்றார்.

# சட்டப்பேரவையில் கச்சதீவை மீட்பதற்கு தீர்மானம் கொண்டுவந்தால் ஆதரிப்போம்

## கம்யூ. பாண்டியன் தெரிவிப்பு

சீர்காழி, ஜூன் 26



கச்சதீவை மீட்க சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டுவந்தால் அதை நாம் ஆதரிப்போம் - என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் கூறினார்.

இதுகுறித்து நாகை மாவட்டம், சீர்காழியில் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமைக்குழுக் கூட்டம் டில்லியில் ஜூலை 3இல் தொடங்கி 6ஆம் திகதி வரை நடக்கிறது. தமிழகத்திலிருந்து 11 பேர் பங்கேற்கின்றனர். நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகளை தனியாருக்கு விற்கப்போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் இதைத் தடுக்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீரை மத்திய அரசிலுள்ள தி.மு.க. விரைவில் பெற்றுத்தர வேண்டும்.

கச்சத்தீவை மீட்க, சட்டப் பேரவையில் அரசு தீர்மானம் கொண்டுவந்தால், இந்திய கம்யூனிஸ்ட் அதை ஆதரிக்கும் - என்றார்.

# நக்ஸல்களை அழிக்கச் செயற்கைக்கோள்: 'இஸ்ரோ'வை அணுகுகிறது மத்திய படை

புதுடில்லி, ஜூன் 27

நாட்டில் நக்ஸலைட்டுகள் நடமாட்டமுள்ள இடங்களைத் துல்லியமாக வரைபடங்கள் மூலம் தெரிவிக்கும் செயற்கைக்கோளை துரிதமாகத் தயாரித்து அளிக்குமாறு 'இஸ்ரோ' நிறுவனத்தை துணை இராணுவப் படை கேட்டுக் கொள்ள இருக்கிறது.

நக்ஸலைட்டுகள் மீதான தேடுதல் வேட்டையை மத்திய அரசு முடுக்கிவிட்டுள்ளது. மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் இருப்பிடங்களைக் கண்டறிந்து அவர்களை ஒடுக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் தீவிரவாதிகளை ஒடுக்கும் முயற்சியில் தங்களுக்கு உதவுமாறு இஸ்ரோ நிறுவனத்தைக் கேட்டுக் கொள்ள துணை இராணுவப் படை முடிவு செய்துள்ளது. அதாவது இஸ்ரோ நிறுவனம் நக்ஸலைட்டுகள் இருப்பிடத்தை எளிதில் கண்டறியும் வகையில் நவீன செயற்கைக்கோளைத் தயாரித்து அளித்தால் அவை அளிக்கும் 'டிஜிட்டல் வீடியோ' படங்கள் மூலம் அவர்களின் நடமாட்டம் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

மலைகள் அடர்ந்த பகுதிகளில் பாதைகள் சரிவர இல்லாததால் நக்ஸலைட்டுகள் மீதான நடவடிக்கை பாதுகாப்புப் படையினருக்கு பெரும் சவாலாக உள்ளது.

இந்நிலையில் சர்வதேச தகவல் தொழில் நுட்பம் மற்றும் செயற்கைக்கோள்கள் மூலம் கிடைக்கும் படங்கள் மூலம் நக்ஸலைட்டுகள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தால் மலைப் பாதையை அல்லது வனப்பகுதியை கடந்து சென்று தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்துவது பாதுகாப்புப் படையினருக்கு எளிதாக இருக்கும் என்று துணை இராணுவப் படையைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மும்பைத் தீவிரவாதிகளை ஒப்படைக்க பாக். மறுப்பு

புதுடில்லி, ஜூன் 27

மும்பைத் தாக்குதல் வழக்கில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள 22 தீவிரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது - என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியா ஆதாரங்கள் கொடுத்தால், பாகிஸ்தானிலேயே தங்கள் நாட்டுச் சட்டப்படி இவர்கள் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் நடத்திய தாக்குதலில் 195 பேர் பலியாயினர்.

தீவிரவாதிகளில் 9 பேர் கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் உயிருடன் சிக்கினார். மும்பை ஆர்தர் சாலை சிறை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தனி நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடக்கிறது. அஜ்மலும் இதே சிறையில்தான் அடைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் பற்றி விசாரித்த மும்பை குற்றப்பிரிவுப் பொலிஸார், கடந்த பெப்ரவரியில் 11 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். இதில் அஜ்மல் கசாப், தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் உதவியாக இருந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் பாகிம் அன்சாரி, சபாருதீன் அகமது உட்பட 38 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த 3 பேரை தவிர மற்றவர்கள் தலைமறைவாக உள்ளனர். இவர்களில் பலர் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள்.

இந்த குற்றவாளிகளுக்கு எதிராக பிணையில் வர இயலாத பிடிவிறாந்து பிறப்பிக்கும்படி மும்பைப் பொலிஸார் கோரினர்.

குற்றவாளிகளின் முகவரி இல்லாமல் கைது உத்தரவு பிறப்பிக்க நீதிபதி மறுத்தார். 27 குற்றவாளிகளின் முழு முகவரியை அரசு சட்டத்தரணி கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இதில் 22 பேருக்கு பாகிஸ்தான் முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, 27 பேருக்கும் பிணையில் வரமுடியாத கைது உத்தரவை நீதிபதி பிறப்பித்தார். இதை சர்வதேச பொலிஸ் உதவியுடன் அமுல்படுத்தவும் உத்தரவிட்டார். தனி நீதிமன்றம் பிறப்பித்த இந்த உத்தரவை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது.

# நக்ஸல் தலைவர் டில்லியில் கைது

சென்னை, ஜூன் 26

தலைமறைவாகவிருந்த நக்ஸலைட் இயக்கத் தலைவர் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் டில்லியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் கோபாலன் (வயது - 59). இவர் மாவோயிஸ்ட் நக்ஸலைட் இயக்கத் தலைவர்களில் ஒருவர். இவர், தர்மபுரி மாவட்டம் நரசம்பட்டி பொலிஸ் நிலையத்தில் தர்மலிங்க செட்டியார் என்பவரைக் கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டார்.

கொலை வழக்கில் உயர்நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது. அதன்பின் 1987ஆம் ஆண்டு அவர் பிணையில் வந்தார். அதன் பின்னர் தலைமறைவாகி விட்டார்.

இந்நிலையில் டில்லியில் பதுங்கியிருந்த கோபாலனை தனிப்படைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

# தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட சரப்ஜித்தின் மறு ஆய்வு மனு பாக். நீதிமன்றால் நிராகரிப்பு

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸை சேர்ந்தவர் சரப்ஜித் சிங். இவர் 1990ஆம் ஆண்டு வழி தெரியாமல் பாகிஸ்தான் பகுதிக்குள் சென்று விட்டார். அவரைப் பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்து லாகூரில் 4 இடங்களில் வெடிகுண்டு வைத்து 14 பேரைக் கொன்றார் என வழக்குத் தொடர்ந்தனர். தீவிரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் அவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

அதை லாகூர் உயர் நீதிமன்றம் 2003ஆம் ஆண்டும், உச்ச நீதிமன்றம் 2005ஆம் ஆண்டும் உறுதி செய்தன.

அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி சரப்ஜித் சிங்கை தூக்கில் போட திகதி குறிக்கப்பட்டது. சரப்ஜித் குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதன் பேரில் மத்திய அரசு தலையிட்டதால் தண்டனை 30 நாள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் சரப்ஜித் சிங், உச்ச நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்தார். அவரது சார்பில் சட்டத்தரணி ராணா அப்துல் ஹமீது ஆஜரானார். கடந்த ஆண்டு சட்டத்தரணி ராணா பஞ்சாப் மாநில கூடுதல் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் கடந்த 3 முறை சரப்ஜித் வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர் ஆஜராகவில்லை. நேற்றுமுன்தினம் நீதிபதி ராஜா பயஸ் அகமது தலைமையிலான ஆயத்தின் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போதும் சட்டத்தரணி ராணா ஆஜராகவில்லை. அதைத் தொடர்ந்து சரப்ஜித் சிங்கின் மறு ஆய்வு மனுவை தள்ளுபடி செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் ஷியாக்களின் சந்தையில் குண்டுத் தாக்குதல்; 69பேர் உயிரிழப்பு; நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயம்

பக்தாத், ஜூன் 26

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில், ஷியாக்கள் செறிந்து வாழும் மாவட்டத்திலுள்ள மார்டி சந்தையில் புதன்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில், 69 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

தள்ளுவண்டியொன்றில் மரக்கறிகளுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்குண்டு, உள்ளூர் நேரப்படி இரவு 7 மணியளவில் பயங்கரமாக வெடித்தது. இராச்சாப்பாட்டுக்கான உணவு கொள்வனவில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் இதில் பலியாயினர் என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

''குண்டுச் சிதறல்கள் 600 யாருக்கு அப்பாலும் பறந்துள்ளன. இவற்றால் அநேக கடைகளிலும் தீப்பற்றிக் கொண்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக் கூடும். காயமடைந்தவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அநேகர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர்'' எனப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''இக்குண்டு வெடிப்பில் 69 பேர் பலியாகியுள்ளனர். 135 பேர் காயமடைந்துள்ளனர்'' என உள்துறை அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்தார். உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72 ஆகும் என பொலிஸ் அதிகாரிகளும், வைத்தியசாலை அதிகாரிகளும் சதர் நகரில் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தனர். இவர்கள் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

குண்டு வெடித்ததையடுத்து, அப்பகுதி ஈராக்கிய பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. வாகனப் போக்குவரத்து திசை திருப்பப்பட்டது. அமெரிக்க இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அப்பிராந்தியத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன என உள்ளூர்வாசிகள் குறிப்பிட்டார்கள்.

''நம்ப முடியாதவாறு, இடி முழக்கம் போன்ற சத்தம் கேட்டது. அடுத்து கட்டட ஜன்னல், கதவுக் கண்ணாடிகள் நொறுங்கித் தெறித்தன. பயங்கரக் காற்று என்னை மோதி கீழே தள்ளியது. பின்னர் கொங்கிரீட் மதிலுக்குப் பின்னால் நான் கிடப்பதை உணர்ந்தேன். இதனால் நான் தப்பியுள்ளேன்'' என காசீம் இஸ்மாயில் என்னும் 24 வயதான நபர் விவரித்தார்.

''புதன்கிழமை, இதற்குப் பின்னர் ஷியாக்கள் செறிந்து வாழும் மற்றுமொரு பகுதியான ஜிகாத்தில் பிறிதொரு குண்டு வெடித்தது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். 100 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் பிலியார்ட்ஸ் மண்டபத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்தவர்களாவர்'' என அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

''நான்கு நாள்களுக்கு முன்னரும், வட மாநகரான கிர்குக்கிற்கருகிலுள்ள ஷியா நகரில் ட்ரக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் 82 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஈராக்கில் இவ்வருடம் இடம்பெற்ற படுமோசமான பாரிய தாக்குதல் இதுவாகும்'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''பக்தாத்திலுள்ள ஷியாக்களின் புனித ஸ்தலத்துக்கு வெளியே, ஏப்ரல் 24 ஆம் திகதி, பெண் தற்கொலையாளிகள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்களில், 71 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பெருந்தொகையானோர் யாத்திரிகர்களாவர்'' என்றும் அவர் விவரித்தார்.

# ஒபாமா எழுதிய நூல் தமிழில் வெளியாகும்

சென்னை, ஜூன் 26

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எழுதிய சுயசரிதையான 'என் தந்தையின் கனவிலிருந்து' என்ற நூல் கிழக்குப் பதிப்பகம் சார்பில் தமிழில் வெளியாக உள்ளது.

இந்நூலை தமிழில் வெளியிட சம்மதித்துள்ள ஒபாமா, கிழக்குப் பதிப்பகத்துடன் அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இப்புத்தகம் அவர் அமெரிக்க ஜனாதிபதியாவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. கென்யாவைச் சேர்ந்தவரான தனது தந்தை, அமெரிக்க வெள்ளை இனத்தைச் சேர்ந்த தனது தாயை சந்தித்து, எவ்வாறு திருமணம் செய்து கொண்டார் என்பதையும் அவர் அதில் விளக்கியுள்ளார்.

# எமது நாட்டுத் தேர்தலில் அமெ. தலையீடு: ஒபாமா மன்னிப்புக் கோர வேண்டும்

## அஹ்மதிநிஜாத் தமது உரையில் கோரிக்கை



அஹ்மதிநிஜாத்துக்கு ஆதரவான கடும்போக்கு ஈரானிய மாணவர்கள் தெஹ்ரானிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு வெளியே அமெரிக்க, பிரிட்டிஷ் கொடிகளை எரித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள போது....

தெஹ்ரான், ஜூன் 26

ஈரானிய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களை அரசு கையாளும் விதம் குறித்து மேற்குலகம் சுமத்திவரும் குற்றச்சாட்டுகளை அஹ்மதிநிஜாத் நிராகரித்துள்ளார்.

''அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மாற்றத்துக்காக குரல் கொடுக்கிறார். எனினும், முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் வலைக்குள் சிக்குண்டு அவரது வழியையே கடைபிடித்து வருகின்றார்'' என்றும் அஹ்மதிநிஜாத், தமது அரச தொலைக்காட்சி உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.


''ஒபாமா தமது முன்னோடியாக புஷ்ஷையே வரித்துள்ளார். ஈரான் விவகாரத்தில் அவரின் போக்கையே தாமும் கடைப்பிடிக்கின்றார். சமீபத்திய ஈரானிய தேர்தல்களில் அமெரிக்கா அநாவசியமாக தலையிட்டுள்ளது. இதற்காக அவர் மன்னிப்புக் கோரவேண்டும்'' என்றும் அவர் கோரியுள்ளார்.

''ஈரானிய அரசு ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கு குரூர முறைகளைக் கையாள்கிறது. ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக, இதுவரை 70 பல்கலைக்கழக பேராசிரியர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்'' என இச்சமயத்தில் இணையமொன்று தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து போராட்டம் நடத்திவரும் எதிரணித் தலைவர் ஹொசின் மௌசாவியின் அமைப்புடன் இந்த இணையம் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும்.

# தெஹ்ரான் போராட்டங்களில் பெண்களும் பங்கேற்பு

தெஹ்ரான், ஜூன் 26



ஈரானில் தேர்தல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் எதிரணியினருக்கு ஆதரவாக பெண்களும் களத்தில் குதித்துள்ளார்கள். தெஹ்ரானில் இடம்பெற்ற பெண்களின் ஆர்ப்பாட்டப் பேரணியில் நூற்றுக் கணக்கான பெண்கள் கலந்துகொண்டார்கள்.

தலைநகரான தெஹ்ரானில் சனிக்கிழமை துணைப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம் யுவதி நேடா சொல்ட்டானின் உருவப் படங்களைக் கொண்ட அட்டைகளையும் பலர் ஏந்தியிருந்தனர். சூடுபட்ட பின்னர் அந்த யுவதியின் வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் குருதி வடிந்ததை காட்டும் படங்களையும் அவர்கள் ஏந்தியிருந்தார்கள்.

''ஈரானிய பெண்கள் அதிக சக்தி படைத்தவர்கள். அவர்களுக்கு அவர்களின் சுதந்திரம் தேவை'' என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண்ணொருவர் குறிப்பிட்டார். ''அநீதிக்கும் அடக்குமுறைக்கும எதிராக நாங்கள் ஒன்று திரண்டுவிட்டோம். ஆண் - பெண் பேதம் பாராது, உரிமைக்குரல் எழுப்ப ஒன்றுதிரண்டுவிட்டோம்'' என்றும் அவர் கூறினார்.

''தேர்தலில் இடம்பெற்றுள்ள ஊழல்கள், மோசடிகள் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள அதிருப்தியும், விரக்தியுமே இன்றைய எழுச்சிக்கும், கிளர்ச்சிக்கும் காரணமாகும்'' என சமாதான நோபல் பரிசு பெற்றுள்ள சிறீன் எபாடி தெரிவித்தார். அவர் பெண்களின் நிலை குறித்தும் விவரித்தார்.

''சமூகத்தில் பெண்களே ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டுமுள்ளனர். உரிமைக்காகவும், தங்களின் சுதந்திரத்திற்காகவும் குரல் கொடுக்கவும், போராடவும் அவர்கள் தலைப்பட்டுள்ளார்கள். இதுவரவேற்கத்தக்கதொரு மாற்றம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''1990 ஆம் ஆண்டு குவைத் மீது சதாம் ஹுசைன் படையெடுத்தார். அப்போதும் பெண்கள் வீதிகளில் ஆட்சேபப் போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். இஸ்ரேலிய தாக்குதலில் தங்கள் பிள்ளைகளும், கணவன்மாரும் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து பலஸ்தீனப் பெண்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். அதுபோல ஈரானிய பெண்கள் தற்போது அநீதிகளுக்கு எதிராகப் போராட முனைந்துள்ளார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அஹ்மதி நிஜாத்தின் வெற்றி மீளாய்வு செய்யப்படமாட்டாது

## உச்சமட்டத் தலைவர் திட்டவட்டம்

தெஹ்ரான், ஜூன் 26

ஈரானில் ஜூன் 12 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள கடும் போக்காளரான ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநிஜாத்தின் வெற்றி மீளாய்வு செய்யப்படமாட்டாது என உச்சமட்டத் தலைவர் அயத்தொல்லா அலி கமேய்னி, அறிக்கையொன்றின் வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

வீதி ஆர்ப்பாட்டங்களில் விடுக்கப்படும் கோரிக்கைகள், நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு ஈரானிய ஆட்சியாளர்கள் செவிசாய்க்கவும் மாட்டார்கள். தலைகுனியவும் மாட்டார்கள் என்றும் அவர் அதில் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள மஹ்மூத் அஹ்மதிநிஜாத், ஜூலை 26 ஆம் திகதிக்கும், ஓகஸ்ட் 19 ஆம் திகதிக்குமிடையில் பதவிப் பிரமாணமெடுத்துக் கொள்வார் என அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஈரானிய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் இடம்பெற்றுவரும் ஆட்சேப ஆர்ப்பாட்டங்களையொட்டி, டசின் கணக்கான எதிரணித் தொண்டர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள், ஈரானிய ஊடகவியலாளர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமை காப்பகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. வெளிநாட்டு நிருபரொருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவை குறிப்பிட்டுள்ளன.

இதுவரை மோதல்களில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை முழுமையாக வெளியாகவில்லை. எனினும், ஈரானிய அரச ஊடகம், இதுவரை 17 பேரே கொல்லப்பட்டுள்ளனர் என அறிவித்துள்ளது. சனிக்கிழமை பெண்ணொருவர் பகிரங்கமாகச் சுட்டுக்கொல்லப்பட்டார் என அமெச்சூர் தொலைக்காட்சி நிறுவனமொன்று குறிப்பிட்டுள்ளது.

தலைநகரான தெஹ்ரானிலுள்ள 53 வயதான பெண்ணொருவர், ஏ.பி. செய்தி நிறுவனத்துடன் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு களநிலை விவரங்களை வெளியிட்டுள்ளார். ''நாடாளுமன்றத்துக்கருகிலுள்ள பஹாரிஸ்தான் சதுக்கத்தைச் சூழ பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரும், கலகம் அடக்கும் பொலிஸாரும், பஜிஜி என்னும் துணைப்படையினரும் எங்கும் குவிக்கப்பட்டுள்ளனர்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களையொட்டி இப்பெண் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

# ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படும் வரை ஈரானில் போராட்டங்கள் நீடிக்கலாம்

## மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான முன்னாள் அமே. தலைவர் தகவல்

வாஷிங்ரன், ஜூன் 26

''ஈரானிய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படும்வரை, அங்கு ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நீடிக்கலாம். இதற்கு வாரங்கள், மாதங்கள், வருடங்கள் கூட கடக்கலாம். உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடியாது'' என நேட்டோவின் முன்னாள் தூதர் ரொபர்ட் ஹண்டர் தெரிவித்துள்ளார். கார்ட்டர் நிர்வாகத்தில் ரொபர்ட் ஹண்டர், மத்திய கிழக்கு விவகாரங்களுக்கான தலைவராகவுமிருந்தவர்.

ஈரானிய தற்போதைய நிலைவரம் குறித்து, அசோசியேட்டப் பிரஸ் செய்தி நிறுவனத்துக்கு இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி அமோஸ் ஹிலாட்டும் கருத்து வெளியிட்டுள்ளார்.

''மஹ்மூத் அஹ்மதிநிஜாத்தின் ஆட்சி அதிவிரைவில் கவிழ்ந்து விடும் என்பதற்கான அறிகுறிகள் கிடையா. அதேவேளை, ஈரானில் தலைதூக்கியுள்ள ஆர்ப்பாட்டங்களால், உலகெங்கணுமுள்ள புத்திஜீவிகள் வியப்படைந்துள்ளார்கள்'' என அமோஸ் ஹிலாட் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் மோசடி குற்றச்சாட்டின்பேரில் எதிரணித் தலைவர் முசாவியின் ஆதரவாளர்கள், ஆர்ப்பாட்டப் பேரணி நீடிக்கும் என அறிவித்தல் விடுத்துள்ளார்கள். முசாவியின் பாரியாரும், பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதியுமான ஜஹாரா ரஹ்னாவார்ட், ''போராட்டத்தில் ஈடுபட்ட அநேகர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது வேதனைக்குரியதொன்று'' என இணையமொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

''கைது செய்யப்பட்டுள்ள அனைவரையும் அரசு நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். ஈரானிய மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவுமே சட்டபூர்வமான போராட்டங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத்தின் முன்னர் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் படையினர் தடியடி

தெஹ்ரான், ஜூன் 26

ஈரானிய நாடாளுமன்றத்துக்கருகில் புதன்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. இதனைக் கலைக்க முற்பட்ட பாதுகாப்புப் படையினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கடும் மோதல் மூண்டது. ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் படையினரை நோக்கிக் கல்வீச்சில் ஈடுபட்டனர்.

இதையடுத்துப் படையினர் தடியடி நடத்தியதுடன். கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்தனர். வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களில் அநேகர் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் காயமடைந்தனர்.

அதேவேளை, ஈரானிய வீதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள் சம்பந்தமான செய்திகளைத் திரட்டுவதற்கு சர்வதேச ஊடக நிறுவனங்களின் ஊடகவியலாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் அலுவலகங்களிலேயே தங்கியிருக்கவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவங்களை நேரில் கண்டவர்களின் தகவல்களே வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

தடைவிதிப்பையும் மீறி ஈரானில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பாரிய பேரணியொன்று நடத்தப்படுமென அறிவித்தல் விடுத்துள்ளனர். 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியைத் தோற்றுவித்த அயத்தொல்லா ருஹ்கொல்லா கொமேய்னியின் அடக்கத் தலத்துக்கருகிலிருந்து பேரணி ஆரம்பமாகும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஈரானில் இடம்பெற்றுவரும் ஆட்சேப ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக உச்சமட்டத் தலைவர் அயத்தொல்லா கொமேய்னி மீண்டும் அமெரிக்கா, பிரிட்டன், இதர வெளிநாடுகள் ஆகியவற்றின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார். அரசுக்கு எதி[illegible] எதிரணியினரை இந்நாடுகளே முடுக்கிவருகின்றன என்றும் அவர் சாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ். மாநகர சபைத் தேர்தலில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, அவரது பிரத்தியேக செயலாளர் இ.சங்கையாவுடன் செயலகத்தில் அமர்ந்திருப்பதையும் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் எம்.றெமிடியஸ், சுயேட்சைக்குழு ஒன்றின் முதன்மை வேட்பாளர் சுபியான், சுயேட்சை குழு இரண்டின் முதன்மை வேட்பாளர் அ.மாணிக்கசோதி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன், லக்ஸ்மன்)

## கண்காட்சி

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் சுகாதரக்கழகமும், மானிப்பாய் சுகாதரக் கழகமும் இணைந்து நடத்தும் பாதுகாப்பான உணவும், போஷாக்கும் என்ற கண்காட்சி நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல், 11மணி முதல் பிற்பகல் 4மணிவரை மானிப்பாய் மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள்ளது. (204)

## நூலக விருத்தி செயலமர்வு

தீவக வலயப் பாடசாலை நூலகங்களின் அபிவிருத்தி கருதி நூலகர்,உதவி நூலகர், நூலக ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வில் பாடசாலைகளின் நூலக விவரக் கொத்தினை பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரர் அறிவித்துள்ளார். (1-67)

# 'வணங்கா மண்' கப்பலை இலங்கைக்கு அனுப்ப சகல ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்யும்

## கருணாநிதி சட்டசபையில் உறுதி

சென்னை, ஜூன் 26

''ஐரோப்பாவில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் திரட்டி அனுப்பிய நிவாரணப் பொருள்கள் அடங்கிய கப்பலை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ளும்'' - இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று, இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக ஐரோப்பா வாழ் தமிழர்களால் திரட்டி அனுப்பப்பட்ட சுமார் 800 தொன் எடை கொண்ட மருந்து மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றி வந்த நிவாரணக் கப்பலை இலங்கை அரசு திருப்பி அனுப்பியது தொடர்பான சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விவாதத்தில் பி.கே.சேகர்பாபு (அ.தி.மு.க.), வேலூர் ஞானசேகரன் (காங்.), ஜி.கே.மணி (பா.ம.க.), நன்மாறன் (மார்க்சிஸ்ட்), சிவபுண்ணியம் (கம்யூனிஸ்ட்), ரவிக்குமார் (சிறுத்தைகள்) ஆகிய உறுப்பினர்கள் பங்கேற்றுப் பேசினார்கள்.

மனிதாபிமான அடிப்படையில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காகத் திரட்டி அனுப்பிய உணவு, மருந்து உள்ளிட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய கப்பலை மீண்டும் இலங்கைக்குத் திரும்ப அனுப்பி, அங்கு பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு முறையாக வழங்க உரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

மாநில, மத்திய அரசுகளின் முயற்சி காரணமாக அந்தக் கப்பல் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் என செய்திகள் வந்தாலும், அது முறையாக நடைபெறுமா என்ற சந்தேகம் உள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இதில் முதல்வர் மிகுந்த விழிப்புடன் மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்த நிவாரணப் பொருள்களை செஞ்சிலுவைச்சங்கம் மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், அங்கு எஞ்சியுள்ள தமிழர்கள் சகஜ வாழ்க்கை வாழ ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி னார்கள்.

உறுப்பினர்களின் கருத்துகளுக்குப் பதிலளித்து முதலமைச்சர் கருணாநிதி கூறியவை வருமாறு:-

நேற்றுமுன்தினம் மாலை எஸ்.எம். கிருஷ்ணாவை இலங்கையில் இருந்து வரும் அந்நாட்டு ஜனாதிபதியின் சகோதரர்கள் கோத்தபாய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் சந்திக்கிறார்கள் என்று தகவல் வந்ததும், மத்திய அமைச்சர் ராசாவைத் தொடர்பு கொண்டு பேசி அவர்கள் வரும் முன்பாக கிருஷ்ணாவிடம் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசுமாறு தெரிவித்தேன்.

அதன்படி அவரும் கிருஷ்ணாவுடன் பேசினார். பின்னர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் என்னுடன் பேசினார். நானும் நிலைமைகளை விளக்கினேன். இதற்கிடையே கிருஷ்ணாவை சந்தித்தபிறகு செய்தியாளர்களிடம் பேசிய பஸில் ராஜபக்ஷ, ஐரோப்பா வாழ் தமிழர்கள் வழங்கிய நிவாரணப் பொருள்களை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும், இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னரும் அவர்கள் அந்தக் கப்பலைத் திருப்பி அனுப்பினால் அது கண்டிக்கத்தக்கது; நம்பிக்கைத் துரோகம் ஆகும். இந்த நிவாரணப் பொருள்களை இலங்கைத் தமிழர்கள் பெற நாம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வோம். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் நம்மிடையே ஆரம்பத்தில் இருந்தே ஒற்றுமை இல்லாமைதான் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம். இனிமேலாவது நாம் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.(சி)

# நாடுகடந்த தமிழீழ அரசு...???

அன்புக்குரிய யாழ்.குடா மக்களே!

*பிரபாகரன் என்ற சுயநலப் பயங்கரவாதி கொல்லப்பட்டுவிட்டாரா?

*முப்பது வருடமாக தமிழீழம் பேசியவர்களால் தமிழர்களான நமக்கு நடந்தது என்ன?

*எத்தனையாயிரம் எம் உறவுகள் கொல்லப்பட்டனர்?

*தமிழீழ அபிவிருத்திக்கான நிதிச்சேகரிப்பு என்று மக்களிடமிருந்து பல வழிகளிலும் புலிகளால் வசூலிக்கப்பட்ட பணத்தினால் எமக்கு ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி என்ன?

*தமிழ் மக்களுக்கென பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசால் அனுப்பப்பட்ட உதவிப் பொருள்களுக்கும், பணத்திற்கும் என்ன நடந்தது?

*தமிழர்களின் அரசியல் தலைவர்களென கள்ள வாக்குகள் மூலம் பாராளுமன்றம் சென்றவர்களால் எம் மக்களுக்கு கிடைத்த உதவிகள், அபிவிருத்திகள் என்ன?

*சுனாமி மீள்கட்டுமான உதவிகளால் வன்னியில் மக்களுக்கு ஒழுங்காக எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?வீதிகள் சரியான முறையில் போடப்பட்டனவா? இவ் அனர்த்தத்திற்காக வெளிநாடுகளும், அரசும் கொடுத்த பணத்தின் தொகை யாது? அதற்கு என்ன நடந்தது?

*புலிகளின் வார்த்தைகளை நம்பி உயிர் கொடுத்த இளைஞர், யுவதிகளின் குடும்பங்களுக்கு அவர்களால் என்ன உதவிகள் வழங்கப்பட்டது?

*பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தியையும் அவரது உடலையும் அரசாங்கம், அறிவித்துக் காட்டிய போது அது பொய் என்றும், பொம்மை என்றும் கூறியவர்கள் இன்று கூறுவது என்ன?

*நாட்டில் பலர் கொல்லப்பட்டதிற்கும், காணாமல் போனதற்கும் யார் காரணம்?

**'நாடு கடந்த தமிழீழ அரசு...???'- என்ற தலைப்பில் 'நாட்டைக் காக்கும் தமிழர்கள் கூட்டமைப்பு' என்ற பெயரில் அநாமேதயமாக வெளியிடப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரம் செவ்வாய் மாலையில் 'உதயன்' அலுவலகத்தில் ஒப்ப டைக்கப்பட்டது. இது பிரசுரமாகாவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று புதனன்று தொலைபேசி மூலம் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அந்தப் பின்னணியிலேயே நேற்று குடாநாட்டுப் பத்திரிகைகள் பல இடங்களிலும் விநியோகத்துக்குச் செல்லும் சமயம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.தொலைபேசி அச்சுறுத்தல் தொடரும் சூழலில் 'உதயன்' ஊழியர்களின் பாதுகாப்பை முன்நிறுத்தி இத்துண்டுப் பிரசுரம் இங்கே அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.**

*யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் படையினரால் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் வருவதாக செய்தி வெளியிட்ட வைத்தியர் சத்தியமூர்த்தி உட்பட்டோர் இன்று நீதிமன்றங்களில் கொடுக்கும் வாக்கு மூலம் விளங்குகிறதா?

*யுத்தத்தில் தோல்வி காணுகையில் தமிழீழத்தின் மந்திரம் தந்திரோபாயம் என்றால், இன்று சிலரால் உருவாக்கப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசின் மந்திரம் யாது?

*நடந்த தமிழீழப் போராட்டத்தின் பலாபலன் என்ன?

சிந்தியுங்கள்!யதார்த்தமாக சிந்தியுங்கள்! மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு சரியான பதில் காண்பவர்கள் அறிஞாளிகள் மற்றவர்கள் ஏமாளிகள். 30 வருடமாக நாம் பயப் பீதியுடனும், நிம்மதியற்றும், வாழ்ந்தோம். ஓரிடத்தில் குண்டு வெடித்தால் அதன் பின் விளைவுகளை சந்தித்தது நாங்கள்தான். பணத்திற்காகவும், பதவிக்காகவும், சுயநலத்திற்காகவும் அழிக்கப்பட்டது நம் உறவுகள் தான் இன்று முடிவு கிடைத்துள்ளது. அன்று எம்மை ஏமாற்றியவர்களில் தயாமாஸ்ரர், ஜோர்ஜ் மாஸ்ரர் போன்றோர் இன்று உண்மைகளை வெளிப்படுத்துகின்றனர். சரியாகச் சிந்தித்து முடிவெடுத்த கருணா அம்மான் போன்றோர் இன்று சிறந்த தமிழ்த்தலைவர்கள். யதார்த்தத்தை சிந்திக்கத்தெரியாத பிரபாகரனும் அவரோடு இருந்தவர்களும் அழிந்துபோன ஏமாற்றுக்காரர்கள். தமிழர்களின் முழுத் துரோகி பிரபாகரன். பேனா பிடிக்க வேண்டிய நாட்டின் எதிர்கால சிறந்த தமிழ் பிரஜைகளுக்கு சுடுகலன் வழங்கியும், தங்கம் அணிந்து சுதந்திரப்பறவைகளாக இருக்க வேண்டிய சகோதரிகளுக்கு நஞ்சுமாலை அணிந்தும் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளனர். நாம் இவை தொடர்பாக சிந்திக்க வேண்டியவர்கள். இவ்வாறான கொடூரத்திலிருந்து மீண்டு இன்று சுதந் திரம் அனுபவிக்க தயாராகும் எம்மை மீண்டும் ஏமாற்றவும், அழிக்கவும் இன்னும் சில தமிழ்த்துரோகிகள் முயற்சிக்கின்றனர். வெளிநாடுகளில் ஒளித்து வாழ்ந்தபடி தம்மை வளர்த்துக்கொள்வதற்காகவும் பணம் வசூலிப்பதற்காகவும் பத்மநாதன் (கே.பி), அறிவழகன், நெடியவன்,றெஜி (ரி.ஆர்.ஓ)உட்பட நாடு கடந்த தமிழீழ அரசு என்றதன் பிரதிநிதிகளும் முயற்சிப்பதோடு, தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக தமிழக அரசியல் தலைவர்களும் தமிழீழம் என்று கூச்சல் இடுகின்றனர். ஈழத்தமிழர்களுக்கு எனக் கூறி பணம் வசூலிக்கின்றனர். பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார், நாடு கடந்த தமிழீழ அரசு என்ற கதைகள் யாவும் இன்னமும் தமிழ் மக்களிடம் மேலும் பணம் வசூலிப்பதற்காகத்தான். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரில் அறிவுள்ளோர் அரசில் இணைகையில் பணத்தாசை பிடித்தோர் சுயாட்சி என்று தனியே உள்ளனர். சிலர் வெளிநாடுகளில் ஒளித்துள்ளனர். அனைவரும் எம்மை ஏமாற்றி தம்மை வளர்க்கவே முயற்சிக்கின் றனர். அனைத்தும் கண்துடைப்பு நாடகமே. வன்னிப் பிரதேசத்தில் எம் உறவுகளுக்கு நிகழ்ந்தவற்றை நலன் புரி நிலையங்களில் உள்ள உறவுகளிடம் கேட்டுப்பாருங்கள்.பாலுக்கு அழுத பச்சிளம் குழந்தையைக்கூட புலிப்பயங்கரவாதிகள் சுட்டிருக்கிறார்கள். நாட்டை அபிவிருத்தி செய்யும் தற்போதைய அரசை கடன்காரர்கள், நாட்டில் அக்கறை இல்லாதவர்கள் என்றெல்லாம் வர்ணிக்கின்றனர். இவ்வாறு சொல்பவர்கள் செவிடுங் குருடாகத் தான் இருக்கவேண்டும். ஒரு அடி நிலங்கூட தம்வசம் இல்லாமல் தமிழீழம் வேண்டும் என்று சிலர் பேசுவது வேடிக்கைக்குரியதே! வன்னியில் வசித்த எம் மக்களிடம் பணம் வசூலித்துஅதில் ஆயுதம் வாங்கி அந்த ஆயுதத்தால் அதே மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் புலிகள்.

எனவே உறவுகளே! நாம் அறிந்தும் அறியாமலும் இவ்வாறான அழிவுகளைச் செய்த புலிகளுக்கு துணைபோய் உள்ளோம். முன்பு நாம் இருளில் நடந்ததால் பள்ளத்தில் விழுந்துள்ளோம். ஆனால் இன்று விடிந்து விட்டது. ஆகையால் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை திருத்தி நம்நாடு, ஒரேநாட்டு மக்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்திடுவோம். இனியும் எதற்கும் ஏமாந்திடாது விழிப்பாக இருப்போம்.கிடைத்துள்ள சுதந்திரமும், சந்தோஷமும் பறிபோகாது பாதுகாப்போம். தொடர்ந்தும் முன்பு புலிகளுக்கு துணை போனதுபோன்று போவோமேயானால் மீண்டும் மிகப்பெரிய அழிவினை நாம் சந்திக்கி நேரிடும் எனவே நன்றாக சிந்திக்கவும். இவ்வளவு விளைவுகள் இடம்பெற்ற பின்பும் சிந்தித்து உணரத் தவறுபவர்கள் மனிதப் பிறவியாக இருக்க மாட்டார்கள். எனவே தொடர்ந்தும் எம்மை ஏமாற்ற முயல்பவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவோமாக! அறிவுள்ள சுதந்திர மனிதர்களாக வாழ்ந்திடுவோம்.

'நாட்டுமக்கள் நாம் ஒற்றுமையாய் வாழ்ந்து நாட்டை வளர்த்திடுவோம்'

'நாட்டைக்காக்கும் [illegible]'

# பத்திரிகைகள் எரிப்புச் சம்பவத்துக்கு அமைச்சர் டக்ளஸ் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வியாழக்கிழமை (நேற்று) அதிகாலை யாழ். குடாநாட்டின் பத்திரிகைகளை விற் பனைக்கு கொண்டு சென்ற சமயம் அப் பத்திரிகைகளை வழிமறித்து அவற்றை எரித்து நாசமாக்கியதுடன் அவற்றைக் கொண்டு சென்ற நபர்களைத் தாக்கிய விஷமத்தனமான செயற்பாட்டை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலந் துறை அமைசருமான டக்ளஸ் தேவானந்தா மிக வன்மையாகக் கண்டித்துள்ளார். மேற்படி செயற்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து வெளியிடப்பட்ட அமைச்சின் ஊடக அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தை மதிக்காத ஓர் அழிவுப் பாதையில் இருந்து மீண்டிருக்கும் எமது சமுதாயம் சுதந்திரமான பாதையில் செல்ல முற்படும் இச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான காட்டுமிராண்டித் தனங்கள் இனிமேலும்நிகழ்வதற்கு எவரும் இடமளிக்கக்கூடாது என பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துக்களுக்கு கருத்துக்களால் முகங்கொடுக்கக் கூடிய சூழ்நிலையே இங்கு கட்டி யெழுப்பப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்-என்றும் அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. (அ)

# முதலாவது தேர்தல் வன்செயல் அரங்கேறியுள்ளது - கூட்டமைப்பு

நல்லூர், ஜூன் 26

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்றே முதலாவது வன்செயல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பத்திரிகைகளை தீயிட்டு கொளுத்தி வன்செயல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேற் கண்டவாறு கூறியுள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோர் கூறியதாவது:-

குடாநாட்டில் வெளியான நேற்றைய (வியாழன்) பத்திரிகைகளுக்குத் தீ வைக்கப் பட்டிருக்கிறது. இது இங்கு அரசு எந்த அளவுக்கு அராஜ கத்தில் ஈடுபடுகிறது என்பதற்கு ஒரு எடுத் துக்காட்டாகும். இந்தச் சம்பவம் குறித்து நாங்கள் எமது வன்மையான கண்டனத்தையும் அதிர்ச்சியையும் தெரிவிக்கின்றோம்.

இது தொடர்பாக சர்வதேசமும் உணரும் என நம்புகிறோம் -என்றனர்.

# பத்திரிகை தீவைப்பு குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டும்

## வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் கோருகிறது

குடாநாட்டுப் பத்திரிகைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை மக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளன. குற்றவளிகள் இனங்காணப்பட வேண்டும் என்று வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

[illegible] ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்குடன் உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில்- குடாநாட்டுப் பத்திரிகைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமை மக்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் காத்திரமான ஒரு தலைமையை தெரிவு செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அரசு குற்றவாளிகளை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் ஏமாற்றுத் திட்டம் தான் யாழ்., வவுனியா தேர்தல்கள்

## தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 26

சர்வதேசத்திடம் கடன்களைப் பெறவே யாழ்., வவுனியா உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசு முழுமுனைப்புடன் நடத்துகிறது. அதாவது தமிழனைக் காட்டி சர்வதேசத்திடம் பிச்சை எடுப்பதற்கு இந்த அரசு முற்படுகிறது. எனவே, இந்த அரசின் போலித் தனத்தை முறியடிக்க சகல தரப்புகளும் ஒன்றுதிரள வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினர்.

இதுகுறித்து மேலும் அவர்கள் அங்கு கூறியவை வருமாறு-

கிழக்கில் பொய்யான தேர்தல் ஒன்றை நடத் தியிருப்பது போன்று யாழ்ப்பாணத்திலும் இவ் வாறானதொரு தேர்தலை நடத்திக்காட்ட அரசு முற்படுகிறது.

பொருளாதாரப் பிரச்சினையால் அரசு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் சர்வதேசத்திடம் கடன்களைப் பெற்றுக்கொள்ள இவ்வாறான தேர்தல்களை திணிப்புச் செய்கிறது.

பல்வேறு இடங்களில் வெற்றிலைச் சின்னத்தில் இலங்கை அரசு போட்டியிட்டு, அதே போன்று மோசடியான தேர்தல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தி இங்கு வெற்றி பெறுவதன் மூலம் சர்வதேசத்திடம் கடன்களைப் பெறுவதற்கு அது முயல்கிறது.

போலித் தனங்களை இனங்கண்டு மனிதப் படுகொலைகளுக்கு சவுக்கடித் தீர்ப்பொன்றை யாழ். மற்றும் வவுனியா உள்ளூராட்சித் தேர்தல்களில் மக்கள் வெளிப்படுத்துவார்கள் - என்று கூறினர். (அ-111)

# பிரபா கொலைக்கு உரிமை கோரிய பிரபல சோதிடர் நாலாம் மாடியில்!

## அரசு விரைவில் கவிழும் என்றும் ஆரூடம் சொன்னாராம்

கொழும்பு, ஜூன் 26

புலிகளின் தலைவர் பிரபாகரனை சூனியத்தின் மூலம் நானே கொலை செய்தேன் என்றும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி விரைவில் கலையும் என்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கூறிய சோதிடர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி சட்டமூலம் மீதான விவகாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு -

பிரபல சோதிடர் ஒருவர் பிரபாகரனை அரசு கொல்லவில்லை. சூனியத்தின் மூலம் நானே கொலை செய்தேன் என்றும் மஹிந்தவின் அரசு விரைவில் கவிழும் என்றும் தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் கூறியிருக்கின்றார்.

அச்சோதிடர் ஜனாதிபதியை கொலை செய்யத் திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தனது கருத்தைக் கூறியமைக்காக சோதிடர் ஒருவர் கைது செய்யப்பட்டமை இலங்கை வரலாற்றில் இதுதான் முதல் தடவை. இந்நாட்டில் சோதிடர்கூட தனது கருத்தைக் கூறமுடியாதுள்ளது.

இதுதவிர, யுத்தம் இப்போது முடிவுற்ற போதிலும் பாதுகாப்பு கெடுபிடிகள் முடியவில்லை. பாதைகள் அடிக்கடி மூடப்படுகின்றன. அமைச்சர்கள் பலத்த பாதுகாப்புடன்தான் பயணிக்கின்றனர்.

அப்போது வீதிகள் மூடப்பட்டு மக்கள் கடுமையாக சோதிக்கப்படுகின்றனர். இந்நடவடிக்கை மக்களை மிகவும் பாதிக்கின்றது. இது நிறுத்தப்படவேண்டும் - என்றார். (சி)

### ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரம் சிங்களத்தில் விசாரித்ததாக அவர் கூறினார். தாம் எழுதிய கட்டுரைக்காகவே தம்மை கடத்தியுள்ளதாகவும் தற்போது எழுதிவரும் 'யுத்தம் முடிவுற்ற தருணத் தில் நடந்த விடயங்கள்' தொடர்பாக விசா ரணை நடத்தியதன் பின்னர் இதுவே இறுதி எச்சரிக்கை எனக் கூறி விடுவித்ததாகவும் கிருஷ்ணி இஃபாம் பி.பி.ஸிக்கு தெரிவித்தார். (அ-6)

### சனி, திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற மாட்டாது. மீண்டும் செவ்வாய்க் கிழமை முதல் ஒன்றை விட் டொரு நாள் சேவை இடம்பெறும்.அரச அதிபர் கே.கணேஷ் இப்படி அறிவித்துள் ளார்.

செயலகத்தில் மேற்படி இரு நாள்களிலும் பயணம் செய்ய பதிவுகளை மேற்கொண்டவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (6)

### குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டார். அவர் எடுத்துச்சென்ற பத்திரிகைப் பொதிகளை ஆயுததாரிகள் தம்வசம் வைத்திருந்த வாள்களால் வெட்டி, அவற்றை உடைத்து வீதியில் போட்டு, தாம் கொண்டுவந்த பெற்றோலை ஊற்றி பத்திரிகைகளுக்குத் தீ வைத்தனர்.

அதைத் தொடர்ந்து அதே பாதையால் வந்த தினக்குரல், வலம்புரி நாளேடுக ளின் விநியோகப் பணியாளர்களும் வழிமறிக்கப்பட்டனர். அவர்களுடைய பத்திரி கைகளும் பறிக்கப்பட்டு ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த உதயன் பிரதிகளுடன் போட்டு தீ வைக்கப்பட்டன.

இதேநேரம் தனியார் பத்திரிகை முகவர் ஒருவர் தனது கடைக்கு விற்பனைக்காக எடுத்துச் சென்ற உதயன் பிரதிகள்கூட முகமூடி அணிந்த ஆயுததாரிகளால் கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிச் சந்தியில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.நகர படைத் தளபதி தலைமையில் சம்பவ இடங்களுக்குச் சென்ற படையினர் அங்கு விசாரணைகளை மேற்கொண்டனர். யாழ்.பொலிஸார் சம்பவ இடங்களைப் பார்வையிட்டதுடன், விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டோரிடம் வாக்குமூலங்களைப் பெற்றனர். (அ-சி)

### வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெஹி தெனிய தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் குறித்த பகுதியில் தங்குவதற்கான பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ளவில்லை எனவும், அதனாலேயே அவர்களைக் கைது செய்ய நேர்ந்துள்ளது எனவும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மங்கள தெஹிதெனிய குறிப்பிட்டார்.

இவர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

### கூட்டுப்படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் சம்பிரதாயபூர்வ பதவியாக இருந்துவரும் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவியை சட்டரீதியிலான பதவியாக ஏற்பதும், அப்பதவிக்குப் பொறுப்புகளை வழங்குவதும் இச்சட்ட மூலத்தின் நோக்கம் - எனக் கூறினார்.

இச்சட்டமூலத்தை தாம் வரவேற்கின்ற போதிலும் இதில் சில திருத்தங்கள் இருக்கின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் விவாதத்தின்போது குறிப்பிட்டனர்.

அதேபோல் ஜே.வி.பியினரும் இச்சட்ட மூலத்தை ஆதரித்துப் பேசினர். இருப்பினும், இச்சட்டமூலத்தின் உள்நோக்கம் என்ன என்று கேள்வி ஒன்றையும் எழுப்பினர்.

எதிர்க்கட்சிகளினதும், ஆளுங் கட்சியினதும் விவாதத்தைத் தொடர்ந்து பிற்பகல் 12.30 மணியளவில் இச்சட்டமூலம் சபையோரின் இணக்கப்பாட்டோடு வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. (அ-சி)

### யாழ். மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகின.

இத்தேர்தல்களில் யாழ். மாநகர சபைக்கு 23 உறுப்பினர்களும், வவுனியா நகர சபைக்கு 11 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஊவா மாகாண சபைக்கும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி தேர்தல் நடத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்திருப்பது தெரிந்ததே. (சி)

### யுத்த பீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தம் முடிவுற்ற போதிலும் அரசு யுத்த பீதியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற கூட்டுப் படையின் தலைமை அதிகாரி நியமனம் தொடர்பிலான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் தற்போது யுத்தம் இல்லை. அரசின் எதிரிகள் அழிந்து விட்டனர். இருந்தும் அரசுக்கு எதிரி ஒன்று தேவை என்ற நிலைப்பாட்டில்தான் அரசு உள்ளது.

யுத்தம் முடிவுற்றபோதிலும் யுத்தப் பீதியை இந்நாட்டில் தக்கவைத்துக்கொள்ள அரசு முற்படுகிறது. இது நாட்டில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். யுத்த பீதியை நாம் இனியும் விரும்பவில்லை.

**இராணுவ மயமாக்கலுக்கு வழிவகுக்கும்**

அரசு தற்போது கொண்டுவந்திருக்கும் கூட்டுப்படைத் தலைமை அதிகாரி சட்டமூலம் இதையே காட்டுகின்றது. இராணுவமயமாக்கல் ஒன்றுக்கே இச்சட்டமூலம் வழிவகுக்கும்.

இந்த இராணுவ மயமாக்கலைச் செய்து இராணுவத் தீர்வின் ஊடாகத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. புலிகள் தற்போது இல்லாத நிலையில் அரசியல் தீர்வின் ஊடாகத்தான் தமிழரின் பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும்.

ஒரு லட்சம் பேர் படையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எத்தனை வீதம் இடமுண்டு? அல்லது முழுவதும் சிங்களவர்கள் தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

எமது மக்கள் சமாதானமான வாழ்க்கையையே விரும்புகின்றனர். இராணுவ ரீதியில் அவர்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதை விரும்பவில்லை. அப்படி இடம்பெற்றால் உரிமை கோரி மீண்டும் ஒரு அமைப்பு உருவாக வாய்ப்புண்டு.

இது இவ்வாறிருக்க ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்கள் இலங்கை அகதிகளுக்கு வழங்கிய நிவாரணப் பொருட்களைப் பெற்று அவர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா இலங்கையிடம் கோரியிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் - என்றார். (அ-சி)

### வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறப்போகின்ற தேர்தலின்போது எமது மக்களின் சுய விருப்பங்களுக்கும், வாக்களிக்கும் சுதந்திரத்திற்கும் மட்டற்ற ஜனநாயகம் வழங்கப்பவதையே நாம் எதிர் பார்க்கின்றோம். நீதியானதும், நேர்மையானது மான தேர்தல் ஒன்றையே நாம் விரும்பி ஏற்கின்றோம். ஈ.பி.டி.பியின் மக்கள் பிரதி நிதிகளை மக்களே தேர்ந்தெடுக்கும் ஜனநா யக சுதந்திரத்திற்கு எப்போதும் மதிப்பளித்து வந்திருகின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என்பது எமது தேசத்தின் குறிப்பிட்ட பிரதேசங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தி அழகியதும் அறிவு சார்ந்ததுமான நகரங்களாக அவைகளை கட்டியெழுப்புவதுமே எமது நோக்கம். அதற்கான தேர்தலை நாம் நேர்மையோடு எதிர்கொள்ளத் தயாராகவிருக்கின்றோம்.

தேர்தல் கால வன்முறைகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் பலாத்காரங்களுக்கும் அடி பணியாது எந்தவொரு தரப்பினரும் தேர்தலில் போட்டியிட இடமுண்டு. மக்களின் தீர்ப்பே மகத்தான தீர்ப்பு என்பதை ஏற்றுக்கொண்டு தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தேர்தலை கண்காணிக்க வரும் பட்சத்தில் அவர்களின் கண் முன்பாகவே நாம் அமோக வெற்றிபெற்று எமது நேர் மையான வெற்றியை மக்களுக்கு உணர்த்த விரும்புவதற்காகவே தேர்தல் கண்காணிப்புக்குழுவின் வருகையை நாம் மனம் விரும்பி ஏற்றுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (அ)

### யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகமது முகமது சுபியான் தலைமையிலான சுயேட்சைக் குழு ஆகியவற்றினது வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

யாழ்.மாநகரசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் இறுதித் தினமான நேற்று வியாழக்கிழமை காலை 8.31 மணிக்கு வி.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் 10 மணியளவில் முடியப்பு றேமிடியாஸ் தலைமையிலான தமிழரசுக் கட்சியும் இறுதியாக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

இதன் பின்னர் பி.ப. 1.30 மணியளவில் வேட்புமனுக்கள் பரிசிலிக்கப்பட்டபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினதும், ஆறுமுகம் செல்லத்துரை தலைமையிலான சுயேட்சைக் குழுவினதும் மனுக்களில் போதிய ஆவணங்கள் இன்மையால் அவை தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட்டன. ஏனைய அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும், சுபியான் தலைமை யிலான சுயேட்சைக்குழுவிற்கு முதலாம் இலக்கமும் கப்பல் சின்னமும், அபிமன்னசிங்கம்மாணிக்கசோதி தலைமையிலான சுயேட்சைக்குழுவிற்கு இரண்டாம் இலக்கமும் பூட்டுச் சின்னம் வழங்கப்பட்டன. இது தவிர வேட்பாளர்களுக்கான இலக்கங்களும் பிரித்து ஒதுக்கப்பட்டுத் தெரிவிக் கப்பட்டன.

வேட்புமனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் சார்பில் பிரதிநிதிகள் எவரும் சபையில் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வேட்பாளர்கள் சிலரும், தமிழரசுக் கட்சி சார்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ்பிறேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சொலமன்சூசிறில், முதன்மை வேட்பாளர் முடியப்பு றேமிடியஸ் ஆகியோரும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அதன் தலைவரும் முதன்மை வேட்பாளருமான வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர். எல். எப்பைச் சேர்ந்த தி.சிறிதரன், எஸ். மோகன் ஆகியோரும் சுயேட்சைக்குழு ஒன்று சார்பில் சுபியானும், சுயேட்சைகுழு இரண்டின் சார்பில் அபிமன்னசிங்கம் மாணிக்கசோதியும் சமுகமளித்திருந்தனர்.

எஸ். தவராசா என்பவர் சுயேட்சைக்குழுவாக போட்டியி டுவதற்கு கட்டுப்பணம் செலுத்தி நியமனப்பத்திரம் பெற்ற போதிலும் வேட்புமனுத்தாக்கல் செய்யவில்லை. (அ-1-236-111)


மாணவர்களின் நலன் கருதி
2010 A/L 2011
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:- 27.06.2009
சனி காலை 8 மணி
★ ஆரம்ப அலகுகளில் இருந்து கற்பிக்கப்படும் ★
NEC (பெருமாள் கோயிலுக்கு அருகில்)
Clock Tower Road, Jaffna

A/L 2011
இந்துநாகரிகம் - Sat, Sun 10 a.m.
இந்துசமயம் - Sat, Sun 11 a.m.
ஆரம்பம்: 27.06.09 Sat
By: S.ஜெயக்குமார் B.A. (Hons)
Note:- ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் தனிப்பாட அனுமதிகள், இம்மாத கட்டணம் இல்லை.
NEC - யாழ்.நகர்

2011 புதியது 2010 மீட்டல்
சனி:10.00 மணி
Ta : தமிழிந்திரன்
Nc : ஜெயகுமார்
Dra : மங்களேஸ்
Cris : மல்லிகா
Logic : சசிகலா
Geo, S.p : கரன்
Eco : பிரதாப்
Eng : சூரி
Arts Acodamy

A/L - 2011 தமிழ்
A.K ஸ்ரீந்திரராஜன் B.A (Hons)
* தென்னிந்திய தமிழ் இலக்கிய வரலாறு
* திருக்குறள் (அங்கவியல்)
* இலக்கணம்
* செய்யுட் கோவை

BITSMANS
கல்வி நிறுவனம். மானிப்பாய்
புதிய பிரிவு
A/L 2011 தமிழ்
ஆசிரியர் திரு.N.பாலா
சனி/ஞாயிறு - 5.00 P.M

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... பதிவுகளை 27 06 2009 முன்னர் செய்யுங்கள்
# Microsoft Office * English * Accounting
*DTP(Pagemaker,Photoshop,CorelDrow,Typing)
Hardware * Web Developing* Video Editing
*AutoCAD(with Manual Drawing) * VB.net
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft...Systems Engineer
Degree Course * BIT Semester 2,4 & 6,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.